J.M.C.H

ISSN 1391-9504

# விஜய்

Vijey விජය

04.02.2009 - மலர் 05, இதழ் 48

Rs.25.00



## இலங்கையின் சுதந்திரப் பயணம்



## செவ்வாய்க்கான பயணம் ஒத்திவைப்பு



## மண்ணைக் காப்போம்

விலை ரூபா 15/-



## மர்மங்கள் நிறைந்த உயிரினங்கள்

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவீன உலகிலும் வலம் வரும் ரிக்ஷா



இளம் சமுதாயத்தினருக்கு 'ரிக்ஷா' என்றால் தெரிந்திருக்காது. ஆனால், பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்னர் கூட இலங்கையில் ரிக்ஷாப் பயணம் இருந்துள்ளது.

ரிக்ஷா என்பது மனிதன் இழுத்துச் செல்லும் ஒரு பயணவண்டி. இதில் இரண்டு அல்லது மூன்று பேர் வரை பயணம் செய்வார்கள். இரண்டு சக்கரங்கள் கொண்ட இந்த வண்டியை மனிதர் ஒருவர் இழுத்துச் செல்ல அதில் இருவர் அல்லது மூவர் ஹாயாக அமர்ந்திருந்து பயணம் செய்வார்கள். மனிதரே மனிதரை வைத்து இழுத்துச் செல்வது ஒரு கொடுமையான செயல் என்று மனிதாபிமான ரீதியில் கண்டனங்கள் எழுந்ததை அடுத்து பல நாடுகளில் இந்த ரிக்ஷா வண்டிப் பயணம் அழிந்துவிட்டது.



இலங்கையைப் பொறுத்தவரை அதுவும் கொழும்பு நகர் பகுதியில் சில வருடங்களுக்கு முன்னர் பாடசாலைப் பிள்ளைகளை ரிக்ஷா வண்டியில் வைத்து இழுத்துச் செல்லும் வழக்கம் இருந்துள்ளது. இலங்கையில் இந்தப் பயணம் முற்றாக அழிந்துவிட்ட நிலையில் சில நாடுகள் இன்னும் இந்த வழக்கத்தை தொடர்ந்து கொண்டிருப்பது ஒரு கொடுமையென்று மனிதாபிமானம் மிக்க பலர் கவலை தெரிவிக்கின்றனர். ஆனாலும் என்ன செய்வது? வாழ வழி இல்லாத மக்கள் இன்னும் இந்தப் பழக்கத்தை தொடர்ந்து கொண்டு இருக்கின்றனர்.

நமது நாட்டில் முற்றாக ஒழிந்துவிட்ட இந்த ரிக்ஷா வண்டி பற்றிய சில விடயங்களை இளம் சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையில் இங்கு பார்ப்போம்.

ரிக்ஷா என்றால் 'மனித சக்தி வாகனம்'என்று பொருள்படுகிறது. ரிக்ஷா (Rickshaw) என்னும் சொல் ஜப்பானிய சொல்லான ஜின்ரிக்ஷா (Jinrikisha) என்னும் சொல்லில் இருந்தே உருவாகியுள்ளது.(ஜின்-மனித ரிகி-சக்தி ஷா-வாகனம்)

ரிக்ஷா வண்டி முதன்முதலில் 1868 ஆம் ஆண்டளவில் ஜப்பானிலேயே தோன்றியுள்ளது. ஆனாலும், ரிக்ஷா போன்ற வண்டி 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டில் பாரிஸ் நகரில் இருந்துள்ளதாக பழைய ஓவியம் ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.



ரிக்ஷாவைக் கண்டுபிடித்தவர் யார் என்பதற்கு சரியான ஆதாரங்கள் எதுவும் தெரியவில்லை. எனினும், 1848 ஆம் ஆண்டில் அமெரிக்கர் ஒருவரால் இது கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறுவோரும் உண்டு. எனினும், ஜப்பானியர்களினால் இது 1868 இல் கண்டுபிடிக்கப்பட்டதாக ஜப்பானியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 1872 ஆம் ஆண்டில் சுமார் 40,000 ரிக்ஷாக்கள் டோக்கியோ நகரில் இயங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. 1880 அளவில் இந்தியாவில் முதன்முதலாக சிம்லாவிலும் அதையடுத்து 20 வருடங்களின் பின்னர் கொல்கத்தாவிலும் ரிக்ஷாக்கள் இயங்க ஆரம்பித்தன. ஆரம்பத்தில் அங்கு சீனர்களால் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கே ரிக்ஷாக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.1914 இல் இவர்கள் பயணிகளை ஏற்றிச்செல்ல அனுமதி கோரியுள்ளனர். அதனையடுத்து தென்கிழக்கு ஆசியாவின் பல பெரிய நகரங்களில் ரிக்ஷாக்கள் ஓட ஆரம்பித்துள்ளன. இந்த நகரங்களுக்கு இடம்பெயர்ந்து வருபவர்களுக்கு கிடைக்கும் முதல் தொழிலாக இந்த ரிக்ஷா இழுக்கும் வேலையே கிடைத்துள்ளது.

இந்தியா, பங்களாதேஷ் நாடுகளைப் பொறுத்தளவில் இன்றும் சைக்கிள் ரிக்ஷாக்கள் பரந்த அளவில் இயங்குகின்றன. பங்களாதேஷ் தலைநகர் சில சமயங்களில் 'ரிக்ஷா நகரம்'என்றும் கூறப்பட்டது. பங்களாதேஷில் ரிக்ஷா இழுப்பவர்களை 'ரிக்ஷாவாலா' என்று அழைக்கின்றனர்.

நாகரிகமடைந்துவரும் இக்காலப்பகுதியிலும் மனிதர்களை மனிதர்களே வைத்து இழுத்துச் செல்லும் இந்த ரிக்ஷா இழுக்கும் வழக்கம் சில நாடுகளில் இன்னும் இருப்பது ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

-ராஜா



## A யிலிருந்து Z வரை மலர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபக சக்தி அதிகமுள்ள மீன்கள்



ஒவ்வொரு உயிரினத்துக்கும் அதன் படைப்பிற்கு ஏற்ப, அதன் மூளைத் திறனுக்கு ஏற்ப ஞாபக சக்தி இருந்து வருகிறது. அந்த வகையில், மீன்கள் 3 செக்கன்கள் வரையான குறுகிய நேர ஞாபக சக்தியையே கொண்டிருக்கின்றன என்று இத்தனை காலமும் நம்பப்பட்டு வந்தது. ஆனால், அண்மையில் இஸ்ரேல் விஞ்ஞானிகளால் நடத்தப்பட்ட வித்தியாசமான ஆய்வுகளிலிருந்து மீன்களுக்கு 5 மாதங்கள் வரை நடந்த நிகழ்வுகளை நினைவில் வைத்திருக்க முடியும் என்பது தெரிய வந்துள்ளது.



இந்த விஞ்ஞானிகள் இதற்காக சில குறிப்பிட்ட ரக மீன் குஞ்சுகளைத் தொட்டியில் வளர்த்துள்ளனர். அதன்போது, அவற்றின் ஒவ்வொரு உணவு வேளையின் முன்னரும் குறிப்பிட்ட ஒலியை எழுப்பினார்கள். அந்த ஒலிக்குப் பிறகு அவற்றுக்கு உணவு கிடைக்கும் என்ற தகவலை மீன்களின் நினைவில் பதிய வைத்தனர். இவ்வாறு அந்த மீன்களுக்கு ஒரு மாதத்துக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.





பின்னர் அந்த மீன்களை கடலில் குறிப்பிட்ட பகுதியில் சுதந்திரமாக விட்டனர். அங்கு அந்த மீன்கள் இயற்கையான கடல் சூழ்நிலையில், அவற்றுக்குக் கிடைக்கும் இயற்கையான உணவுகளை உண்டு வளர்ந்தன. சுமார் 5 மாதங்கள் கழிந்த பின்னர் அந்த இடத்திற்குச் சென்று, குறிப்பிட்ட ஒலியை எழுப்பினார்கள். குஞ்சாக இருந்தபோது அந்த சத்தத்தைக் கேட்டு வளர்ந்த மீன்கள், இப்போது அதைத் தெரிந்து கொண்டு சத்தம் வந்த திசையை நோக்கி கூட்டம் கூட்டமாக வந்தன. ஆக, குறிப்பிட்ட சத்தம் வரும் இடத்தில் உணவு கிடைக்கும் என்ற தகவல்கள் அவற்றின் நினைவில் பதிந்து இருந்ததே இதற்கு காரணம் என்பது இதன்போது உறுதியானது. இவ்வாறு வரும் மீன்களை எளிதில் பிடித்து விடலாம் என்பது விஞ்ஞானிகளின் ஆய்வு முடிவாகும்.

# தகுதியுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு 2009/2013 கல்வியாண்டிற்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக தகுதியுடைய மாணவர்களிடமிருந்து மருத்துவக் கல்லூரி நிர்வாகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த உ/தரப் பரீட்சை விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அல்லது பரம்பரை ஆயுர்வேத வைத்திய குடும்ப விண்ணப்பதாரிகள் கலைப்பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது அதற்குத் தகுதியான கல்வித் தகைமைகளைப் பெற்றிருப்பது போதுமானது.

விண்ணப்பிக்கத் தகுதிபெற்ற மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை **பதிவாளர், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி,**
**127, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதிக்கு** முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இலங்கை சட்டக்கல்லூரி 2010 ஆம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைத் தகுதி பெற்ற மாணவர்களிடம் இருந்து கோரியுள்ளது.

2000 ஆம் ஆண்டும் அதனை அடுத்தும் க.பொ.த உ/தரப் பரீட்சைக்குத் தோற்றி, அதே அமர்வில் 3 பாடங்களிலும் (பழைய பாடத்திட்டமாயின் 4 பாடங்களிலும்) சித்தி அடைந்த, சட்டக் கல்விப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பாடங்களுடன் க.பொ.த சா/தரப் பரீட்சையில் ஆங்கில மொழியிலும் தமிழ்/சிங்கள மொழியிலும் திறமைச் சித்தி பெற்றவர்கள் இதற்கான விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கலாம்.

சட்டக்கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை **பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி வரை** அலுவலக நேரத்தில் சட்டக்கல்லூரியில் பெற்று, **பெப்ரவரி 27 ஆம் திகதிக்கு முன்னர் "அதிபர், இலங்கை சட்டக்கல்லூரி,கொழும்பு-12"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பதாரிகளுக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும் எனவும் இதற்கு விண்ணப்பதாரிகள் அவசியம் தோற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# 'டெங்கு' தீவிரம்!

நாடெங்கிலும் டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதனால், பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் இவ்வாண்டின் ஜனவரி மாதம் வரை டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 600 ஆக அதிகரித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.



நாட்டின் சில மாவட்டங்களில் இந்நோய் தீவிரமாகப் பரவி வருவதோடு, ஏனைய மாவட்டங்களிலும் இது தீவிரமடையாமல் இருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை, அனைத்து வைத்தியசாலைகளுக்கும் டெங்கு நோய்க்கான மருந்து வகைகளை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும்



தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் வீடுகளையும் சுற்றுச் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதோடு, பாடசாலை சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்க பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'விஜய்' ஊடக சங்கம்: விபரங்கள் கோரியோருக்கு...

'விஜய்' ஊடக சங்கம் தொடர்பான விபரங்களைப் பெறுவதற்கு கடித உறைகளை அனுப்பியோருக்கு விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சிலர் சுயமுகவரி எழுதப்பட்ட முத்திரையொட்டிய நீண்ட கடித உறையை எமக்கு அனுப்பத் தவறியுள்ளனர். அவர்களுக்கு எம்மால் விபரங்களை அனுப்ப முடியாமல் உள்ளமைக்காக வருந்துகிறோம். எனவே, அவர்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு சுயமுகவரி எழுதப்பட்ட முத்திரையொட்டிய நீண்ட கடித உறையொன்றை அனுப்பி விபரங்களை பெற்றுக்கொள்ளவும். *(ஆ-ர்)*

முகவரி:-

**ஊடக சங்கம்,**
**விஜய்,**
**த.பெ.எண் 2037, கொழும்பு.**

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இதோ மீண்டும் இலவச டீசேட் ஒன்றை பெறும் வாய்ப்பு
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1
* இலவச அழகிய டீசேட் ஒன்று


இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகல மண்வாழ் உயிரினங்களுக்கும் நிழலாக, புகலிடமாக விளங்கும் மண் ஏனைய பெரிய உயிரினங்களுக்கும் அவற்றின் வாழ்க்கையின் அத்திவாரமாகத் திகழ்கின்றது. புவியின் நிலப்பகுதியில் மிகப் பெரும்பகுதி மண்ணால் மூடப்பட்டுள்ளது. உயிரினங்களின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மண் ஆனது முக்கிய பங்களிப்பைச் செலுத்துகின்றது.**

# 'மண்' பக்கம் பார்வையைச் செலுத்துவோம்

## மண்ணின் தன்மை




பல பிரிவுகளின் சேர்க்கையே மண்ணாகும். அவற்றை 'மண் படைகள்' என அழைப்பர். ஒவ்வொரு இடத்தைப் பொறுத்தும் மண்ணின் தன்மை, மண்ணின் உள்ளடக்கம் என்பன வேறுபடுகின்றன. நீர், கனியம், வாயு என்பன மண்ணில் உள்ளடங்கியுள்ள பிரதான கூறுகளாகும். வாயு, கல், கூழாங்கல், மணல் என்பனவும் நீர்க்களி, கனியம், ஹியுமஸ் என்பனவும் நிரந்தரமாகக் காணப்படுகின்றன. செழிப்பான மண்ணில் குறிப்பிடக்கூடிய அளவு ஹியுமஸ் படலங்களைக் காணலாம். வளம் மிகுந்த மண்ணானது உருண்டை வடிவமானதாக உருவெடுக்கும்.

## மண் வகைகள்

வேறுபட்ட நிறமும், மண்கலவையும்தான் ஒன்றுக்கொன்று மாறுபட்ட மண்வகைகள் காணப்படக் காரணமாகும். அந்த வகையில் பிரதான மண்வகைகளாக இருவாட்டி மண் (நன்மண்), களிமண், மணல்மண் என மூவகையான மண்வகைகளைக் குறிப்பிடலாம். இதற்கு மேலாக பிரதான மண் வகைகள் மூன்றிலிருந்து உருவான பல்வேறு விதமான மண்வகைகளைக் குறிப்பிடலாம். அவை அவற்றின் நிறம், குணம், சுயரூபம் போன்றவற்றின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகும். ஒவ்வொரு பயிர் வகைகளும் அதற்கு பொருத்தமான மண்ணை ஆதாரமாகக் கொண்டு வளர்கின்றன.




## தாவர உலகம்

இப்பூவுலகம் தோன்றிய நாள் முதல் உயிர்களின் இருப்பிற்கும் இயற்கை வாழ்விற்கும் அடிப்படையான மண், தாவர வளர்ச்சிக்கும் அத்திவாரமாக அமைகின்றது. ஒரு தா்வரத்தின் அடிப்படையான வேர் மண்ணுள்ளேயே அமைந்துள்ளது. இங்கு தாவரத்திற்குத் தேவையான வாயு, நீர் மற்றும் பசளை என அனைத்துப் போசணைப் பகுதிகளையும் மண் தேக்கி வைக்கின்றது. ஒரு தாவரத்தின் வளர்ச்சியில் பெரும் சக்தியை மண்தான் சேர்த்து வைத்திருக்கின்றது. எனவே, சகல சூழல் கட்டமைப்பிலும் அதிக போசாக்குக் களஞ்சியமாகவும் மண் செயல்படுகின்றது. அதனால், மண்வள ஆதாரத்துடனேயே தாவர அல்லது பயிர்ச்செய்கையும் உயிரின இருப்பை உறுதி செய்யும் உணவு உற்பத்தியும் நடைபெறுகின்றன.



## நிலப்பாதுகாப்பு

நீண்ட காலமாக நிகழும் பாறைச் சிதைவுகளில் இருந்தே மண் உருவாகின்றது. எனினும், மண் அழிந்து போவதற்கோ மிகக்குறுகிய காலம் போதுமானதாகும். இதனால், மண்ணைப் பாதுகாப்பது மிக அத்தியாவசியமானதாகும். அவ்வாறு பாதுகாப்பதிலேயே உயிரினங்களின் இருப்புத் தங்கியுள்ளது. இல்லையெனில் உயிரினங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும்.

மண்ணைப் பாதுகாப்பதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய வழிமுறைகள் பல உண்டு. காடு வளர்ப்பு, புல்தரை உருவாக்கம், அடித்தள வளர்ப்பு, கல்மதில் அல்லது கல் கட்டடம் கட்டுதல் என்பன அவற்றில் சிலவாகும். இதன் மூலம் மண்ணை உரிய முறையில் பாதுகாக்கமுடியும். எனினும், உரிய முறையில் பாதுகாக்கப்படாத மண் வளமற்ற மண்ணாக மாறிவிடும். அத்துடன், ஆற்றுநீர் வெளியேறிப் பாய்தல், மண்சரிவு, பூமிய திர்ச்சி, வெள்ளப் பெருக்கு மற்றும் சுழற்சிப்பயிர்ச் செய்கை மாற்றத்தாலும் மண்வளம் பாதிப்படைவதற்கு வாய்ப்புகள் உண்டு.



## கனிய வளம்

உலகின் மிகப் பெறுமதியான பொருளாதார வாய்ப்புகளை அள்ளி வழங்கும் கைத்தொழிலும் தரையில் இருந்துதான் கிடைக்கின்றது. பெறுமதி வாய்ந்த கனியத் திரவங்களின் உற்பத்தித் தளமாகவும் மண்ணே காணப்படுகின்றது. மண்ணில் ஏற்படும் இரசாயன மற்றும் பௌதீகச் செயற்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு பெறுமதியான வளங்கள் உருவாகின்றன. மாணிக்கம், வைரம், தங்கம், மின்ரன் என பல்வேறு பெறுமதியான பொருட்களின் உற்பத்தித் தளமாகவும் மண் விளங்குகின்றது. மேலும், நன்னீர் ஊற்று, கனிய எண்ணெய், மசகு எண்ணெய், என மனித சமுதாயத்திற்கு பயன்மிகு வளங்களும் இங்குதான் உருவாகின்றன.


மாணிக்கம்


தங்கம்

## கனியச் சக்கரம்

கனியச் சக்கரம் பூர்த்தியடைவதற்கு மண் விசேட பங்களிப்பைச் செலுத்துகின்றது. (காபன் சக்கரம், நைதரசன் சக்கரம்) அது உயிரினங்களின் இருப்பிற்கும் முழு உலக இருப்பிற்கும் காரணமாக அமைகின்றது. கனியச் சக்கரம் முழுமை அடையாவிட்டால் கட்டமைப்பு உடைந்து விடும். அப்பொழுது உயிரினங்களுக்குப் பேரிழப்பும் பெரும் பாதிப்பும் ஏற்படும்.




## மண் மாசடைதல்


மனித இருப்பிற்கு அடிப்படையாக இருக்கும் மண்ணை மனிதனே மாசடையச் செய்கிறான். இரசாயனப் பசளையைப் பாவித்தல், காடழிப்பு, கைத்தொழிற்சாலைக் கழிவுகள், இரசாயனத் திரவங்கள், கிருமிநாசினிகள், பீடைக்கொல்லிகள், மீள் சுழற்சிக்கு உட்படுத்தமுடியாத பொருட்கள் மண்ணில் சேருதல் போன்ற காரணங்களால் மண் மாசடைகின்றது. இவை மண்ணில் சேருவதைத் தவிர்ப்பதற்கான சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும், சட்டதிட்டங்களுக்குள் மாத்திரம் வரையறை செய்யப்படாது மண் வளத்தைப் பாதுகாப்பது நம் அனைவரதும் சமூகக்கடமையாகும்.


காடழிப்பு


மண்சரிவு

## நீர்ச்சக்கரம்

நீர்ச்சக்கரத்தின் செயற்பாட்டின் அடிப்படை ஆரம்பமே மண்ணில்தான் ஏற்படுகின்றது. நீரை உறிஞ்சக்கூடிய உட்கிரகிக்கக்கூடிய, களஞ்சியப்படுத்தக்கூடிய தன்மை மண்ணுக்கே உண்டு. அதன்மூலம் மண்ணில் நில நீர்மட்டமானது உயரவும் இறங்கவும் வழி சமைக்கப்படுகின்றது. மண்ணில் ஏற்படும் தாக்கங்கள் நீர்ச்சக்கரத்தின் செயற்பாட்டையும் பாதிக்கின்றது. அதனால், முழுச்சூழல் கட்டமைப்பும் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுகின்றது. உரிய காலத்திற்கு வெப்பமோ, மழையோ கிடைக்காமல் பருவ காலங்கள் பொய்த்துவிடுவதற்கு இதுவே காரணமாகும். அதனால், உயிரினங்களின் இருப்பிற்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.




**-இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய குடும்ப அங்கத்தவர்கள்



'பிளேனெட்டே' (Planete) என்னும் கிரேக்கச் சொல்லில் இருந்து தான் கிரகத்தைக் குறிக்கும் Planet என்னும் பெயர் உருவானது. இச்சொல்லின் பொருள் 'அலைந்து திரிபவன்' என்பதாகும்.


**சூரிய மண்டலக் கிரகங்களைப் பொதுவாக இரண்டாகப் பிரிக்கலாம்.**

1. சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் உட்கிரகங்கள். இவற்றை inner planets என அழைப்பர். அவையாவன; புதன் (Mercury), வெள்ளி (Venus), பூமி (Earth), செவ்வாய் (Mars).

2. தொலைவில் இருந்து சூரியனை வலம் வரும் கிரகங்கள். இவற்றை outer planets என அழைப்பர். அவையாவன; வியாழன் (Jupiter), சனி (Saturn), யுரேனஸ் (Uranes), நெப்டியூன் (Neptune) என்பனவாகும்.

கிரகங்களை பெரிய கிரகம் முதல் சிறிய கிரகம் வரை அளவின் அடிப்படையில் குறிப்பிடுவதாயின் முறையே; வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், பூமி, வெள்ளி, செவ்வாய், புதன் என அமையும். இந்த இதழிலிருந்து இதே அடிப்படையில் கிரகங்களைப் பற்றி தொடர்ச்சியாக நோக்குவோம்.

## வியாழன் (Jupiter)



* அதிக நிறை கொண்ட ஒரு கோள்.
* வியாழனுக்கு 39 சந்திரன்கள் உண்டு.
* விட்டம் - 141,968 கி.மீற்றர்.
* ஒருமுறை சூரியனைச் சுற்ற எடுக்கும் காலம்-11 வருடங்கள் 86 நாட்கள்.
* ஒருமுறை தன்னைத் தானே சுற்ற எடுக்கும் காலம் - 9 மணித்தியாலங்கள் 50 நிமிடங்கள் 30 விநாடிகள்.
* சூரியனிலிருந்து சராசரி தூரம் - 77,28,00,000 கி.மீற்றர்.
* மணிக்கு 45,062 கி.மீற்றர் வேகத்தில் சுற்றுகிறது.
* மேற்பரப்பின் வெப்ப நிலை 140°C.
* பூமியை விட 11 மடங்கு அளவில் பெரியது.
* அயோ, யூரோபா, கனிமீட், கெலிஸ்டோ ஆகிய நான்கும் இதன் முக்கிய துணைக்கோளாகும்.



* வியாழனின் ஒரு துணைக்கோளான 'கனிமீட்' தான் சூரிய மண்டலத்தின் மிகப்பெரிய துணைக் கோளாகும்.
* வியாழனின் 'அயோ' துணைக்கோளானது அனல் கக்கும் எரிமலைகள் நிறைந்தது.
* மிகப்பெரிய சிவப்பு அடையாளங்கள் (Great Red Spot) கொண்ட கிரகம் வியாழன் ஆகும்.
* வியாழக் கிரகத்தை ஜோவியன் (Jovian) கிரகம் என்றும் அழைப்பர்.
* 1989 ஒக்டோபர் மாதம் நாஸாவின் 'கலிலியோ' விண்கலம் வியாழனை நோக்கிப் பயணம் செய்தது.

*(தொடரும்)*

**-இரஞ்சித் ஜெயகர்**

---

ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த செலவினத்தைவிட அதிகளவு செலவை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலும் சில தொழில்நுட்பப் பிரச்சினைகள் காரணமாகவும் செவ்வாய்க்கிரக ஆய்வு நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக 'நாஸா' நிறுவனம் அண்மையில் அறிவித்துள்ளது

# செவ்வாய்க்கான பயணம் ஒத்திவைப்பு

செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்ட சுற்றும் 'ரொபோ' வாகனத்தின் தொழில்நுட்பத்தை மென்மேலும் அபிவிருத்தி செய்ய கால அவகாசம் தேவைப்படுவதாகவும் மேலும் பல முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் பொருட்டும் மேற்படி செவ்வாய்க் கிரக ஆய்வு நடவடிக்கைகள் 2011 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்காக மாத்திரம் 400 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாகவும் அத்திட்டத்தின் தலைவரான டொக் மெக்யூசிஷன் தெரிவித்துள்ளார்.

## செயற்றிட்டத்தின் நோக்கம்

இந்த ஆய்வு நடவடிக்கையின்பொழுது செவ்வாய்க் கிரகத்தின் தரைப்பகுதியை ஆய்வு செய்வதற்காக இதுவரை விண்வெளிக்கு அனுப்புவதற்காகத் தயாரிக்கப்பட்ட 'ரொபோ' இயந்திரங்களில் மிகப் பிரபலமான ரொபோவையே பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். அது ஆறு சக்கரங்களைக் கொண்ட ரொபோ வாகனமாகும். எனினும், அந்த ரொபோ வாகனம் சிறிய ரக நான்கு சக்கர வாகனத்தைப் போன்று தோற்றமளிக்கும். இதன்மூலம் சிவப்புக் கிரகத்தின் காலநிலை மாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு புவியியல் தகவல்களையும் மிக நுணுக்கமாக ஆய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பரிசோதனைகளை விட இத்திட்டத்தின் மூலம் மிகச் சிறந்த வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.


## தொழில்நுட்பப் பிரச்சினைகள்

செவ்வாய்க் கிரகத்தில் பயணிக்கத் திட்டமிட்டுள்ள ரொபோ வாகனத்தின் மோட்டர், கியர் சம்பந்தப்பட்ட கோளாறுகளே பிரதான தொழில்நுட்ப சிக்கல்களாகக் காணப்படுகின்றன.

செவ்வாய்க் கிரகத்தின் மண் மாதிரியை பரிசோதனை செய்வதற்காக மிகக் கடினமான இடங்களில் சிரமின்றி இலகுவாகப் பயணிக்க வேண்டிய கட்டாயத் தேவை இந்த ரொபோ இயந்திரத்திற்கு இருக்கின்றது. கடுங்குளிர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் ரொபோ வாகனத்தின் 'ப்ரேக்' கட்டமைப்பை சுயமாகச் செயல்பட (தன்னியக்கச் செயற்பாடு) வைப்பதே மிகச் சிரமமான செயல்பாடாக இருக்கின்றது. அதே போல பிரதான இயந்திரக் கட்டமைப்பிலும் சிறு கோளாறுகள் ஏற்பட்டிருப்பதோடு, கணினியின் செயற்பாட்டிலும் சிக்கல்கள் நிலவுகின்றன.



ஆறு சக்கரங்களையுடைய ரொபோ இயந்திரம்



ரொபோ இயந்திர ஒத்திகை

இந்த பிரச்சினைகளை விரைவில் தீர்க்க முடியாதென்று தெரிவிக்கும் மெக்யூசிஷன், இதன் சீராக்கல் பணிகளை இந்த வருட ஆரம்பகட்டங்களில் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதே தவிர, அதனைக் கைவிடவில்லை என்பதோடு, இந்நடவடிக்கை தொடர்ந்தும் மிகுந்த வினைத்திறனுடன் முன்னெடுக்கப்படும் என்றும் செவ்வாயில் பயணிக்கவுள்ள ரொபோ வாகனத்தின் பிரச்சினைகள் மிக விரைவாகத் தீர்க்கப்படும் எனவும் நாஸாவின் தலைவர் மைக்கல் க்ரிபின் கூறியுள்ளார்.

## பாரிய பின்னடைவு

செவ்வாயும் புவியும் 26 மாதங்களுக்கு ஒருமுறை அருகருகே பயணிப்பதாகக் கூறப்படுகின்றது. அந்த வகையில், இவ்விரு கிரகங்களும் அருகருகே பயணிக்கும் அடுத்த சந்தர்ப்பம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கும் ஒக்டோபர் மாதத்திற்கும் இடையில் வருகின்றது. இதற்கிடையில் இந்த ஆய்வுப் பயணத்தை முன்னெடுக்க முடியாதுள்ளது. அத்துடன், 1994 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் செவ்வாய்க்கிரக நடவடிக்கைகளில் நாஸா நிறுவனமானது தனது முயற்சியில் பின்னடைவு கண்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இது நாஸா நிறுவனத்தின் மிகப்பெரிய பின்னடைவு எனக் கருதப்படுகின்றது.


தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்

* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்

முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்

இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523

மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# மர்மங்கள் நிறைந்த

நாம் அபூர்வமான பல நிகழ்வுகள் நடைபெறும் ஓர் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது கண்முன்னால் நடைபெறும் விடயங்கள் கண்ணுக்குப் புலப்படாத முறையில் நடைபெறும் விடயங்கள் என்று அபூர்வ நிகழ்வுகள் பல உள்ளன. இப்படி மர்மம் நிறைந்த சில விடயங்கள் பற்றிய உண்மைகளை விஞ்ஞானத்தாலும் புலப்படுத்த முடியாமல் இருக்கின்றது. பேய், பிசாசு, ஆவிகள் நடமாட்டம் போன்றன இத்தகைய விடயங்களாகும். இவற்றில் மக்கள் மத்தியில் நம்பிக்கை அடிப்படையில் காலம்காலமாக இருந்து வரும் விடயங்கள் பல உள்ளன.

இவற்றில் மர்ம அல்லது மறைவான உயிரியல் (Cryptozoology) என்ற கற்கை முக்கியமானதாகும். இந்த விடயம் சில வகையான மர்ம உயிரியல் நடத்தை பற்றி ஆராய்கின்றது. இவ்விடயம் சாதாரண நிலையில் உயிரியல் விஞ்ஞானத்துடன் தொடர்பில்லாத விடயங்களுடன் தொடர்புடைய ஆய்வாகும்.

நெஸ்அகளி நெசீ என்ற உயிரினம், பனிமனிதன், அமெரிக்காவில் பேசப்படுகின்ற பிக்புட் ஆகிய உயிரினங்கள் இத்தகைய மர்ம உயிரிணங்களாகக் கருதப்படுகின்றன. இவை பொதுவான உயிரியல் நியாய தர்மங்களுக்குப் பொருந்தாதவையும் வேற்று இயல்புகளைக் கொண்டவையுமாகும். இத்தகைய உயிரினங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் இரண்டு பிரதான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன.

1. தடயங்களாகக் கிடைக்கும் படிமங்கள் அல்லது கலங்கள்.

2. கற்பனைவாத வியூகங்கள் அல்லது கதைகள்.

உலகம் முழுவதும் பேய், பிசாசு, மோகினி, பூதம் என்பன பற்றிய கதைகள் பல உள்ளன. அவை தொடர்பாக திரட்டப்பட்ட தடயப் பொருட்கள், கிராமியக் கதைகள் என்பனவும் உள்ளன. இத்தகைய கதைகளில் இருந்து பெறப்பட்ட ஒரு தகவல் 'சுபகப்ரா' என்ற அபூர்வ மிருகம் (ChuppaCabra) பற்றியதாகும். அமெரிக்காவிலும் மெக்சிகோவிலும் இந்த மர்ம மிருகம் பற்றிய கதைகள் பரவலாக உள்ளன. ஆனாலும் உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகையில் இவை வெறும் கதைகள் மட்டுமே என்று குறிப்பிடுகின்றனர்.

## சுபகப்ரா என்றால் என்ன?

ஸ்பானிய மொழியில் 'சுபா' என்பது உறிஞ்சிக் குடித்தல் என்பதாகும். 'கப்ரா' என்பது ஆட்டைக் குறிப்பதாகும். இவ்விரு சொற்களும் இணைந்து 'சுபகப்ரா' என்றழைக்கப்படுகின்றது. இரவில் ஆட்டுத்தொழுவங்களுக்குள் நுழைந்து ஆட்டின் கழுத்தைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் என நம்பப்படும் மிருகம் அல்லது மர்ம உருவத்தை இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

## மொகா நகர திடுக்கிடும் தகவல்

1995 ஆம் ஆண்டு புவர்டோரிகாவா பிரதேசத்தில் மொகா நகரில் இவ்வாறான திடுக்கிடும் நிகழ்வு ஒன்று நடந்தது. அந்நகரில் உள்ள ஆட்டுத்தொழுவங்களில் இருந்து ஆடுகள் மாயமாக மறைந்திருந்தன. பின்னர் தேடிப் பார்த்தபோது ஆங்காங்கே ஆடுகள் இறந்து கிடக்க காணப்பட்டன.

அந்த ஆடுகளின் உடலில் இரத்தம் இருக்கவில்லை. கழுத்தில் கூர்மையான பற்கள் பதிந்திருந்ததை அந்நகரவாசிகள் அவதானித்தனர். இந்த செயல் இரவில் நடமாடும் மர்மமிருகம் அல்லது இரத்தம் உறிஞ்சும் பிரமாண்டமான (பேய்) பூதத்தின் செயல் என்று மக்கள் நம்பினர். ஆனால், பின்னர் தெரியவந்த விடயம் இளைஞர்கள் சிலர் ஆடுகளைத் திருடிச் சாத்தானுக்கு இரத்தப் பலி பூஜை நடத்தினர் என்ற உண்மையாகும்.

## சுபகப்ராவைக் கண்டதாக புதிய தகவல்கள்

1995 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இந்த மர்ம மிருகமான 'சுபகப்ரா' பற்றிய தகவல்கள் வந்த வண்ணமுள்ளன. அவ்வாறு கிடைக்கும் தகவல்களில் அனைத்தையும் நம்ப முடியாவிட்டாலும் 2000-2004 வரையிலான சில தகவல்கள் அத்தகைய மர்ம மிருகமான சுபகப்ராவை பற்றிய ஆய்வுகளைப் புறக்கணிக்க முடியாது என்று நினைக்க வைத்துள்ளது.

## உரோமம் உதிர்ந்த கயோட் நரி

2004 ஆம் ஆண்டு அமெரிக்காவின் தென்பகுதி நகரம் ஒன்றில் புனித அந்தோனியார் பண்ணையில் உள்ள கால்நடைகளைத் தாக்கிய மிருகம் ஒன்று பிடிபட்டது. அது பார்வைக்கு அலங்கோலமாகவும் அருவருப்பான பயங்கரத் தோற்றம் உடையதாகவும் இருந்தது. அது பற்றி ஆராய்ந்தபோது அந்த மிருகம் தோல் நோய்க்குள்ளாகி உரோமம் உதிர்ந்த 'கயோட்' இன நரி என்று தெரிய வந்தது.

## ரஷ்யாவில் இரத்தம் உறிஞ்சும் மிருகம்

2005 ஆம் 2006 ஆம் ஆண்டுகளில் ரஷ்யாவில் 'மொஸ்நியுஸ்' என்ற பத்திரிகை இரத்தம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# உயிரினங்கள்

உறிஞ்சும் இராட்சத மர்மப் பிராணி ஒன்று சில ஆடுகள், பன்றிகளின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்ததாக செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால், அதுபற்றி விஞ்ஞானிகள் தலையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ச்சி நடத்தியபோதும் அத்தகைய எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

## நீண்ட கூரான பற்களை உடைய மிருகம்

2006 ஆம் ஆண்டு அமெரிக்காவின் மேன் பிரதேசத்தின் பாதை ஓரத்தில் வாகனம் ஒன்றில் மோதுண்ட அபூர்வமான மிருகம் ஒன்று இறந்து கிடக்கக் காணப்பட்டது. அந்த மிருகத்தின் தோற்றம் நாயினதும் மாட்டினதும் உருவத்தை ஒத்ததாகவும் வாயில் இருந்து வெளித்தெரியும் படியான நீண்ட இரு பற்களை உடையதாகவும் விகாரமான தோற்றத்துடனும் இருந்துள்ளது. அந்த மிருகம் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் மர்ம மிருகமா? என்ற சந்தேகம் எழுந்தபோதும் அவ்விடத்திற்கு உயிரியல் விஞ்ஞானிகள் சென்றபோது கழுகுகள் அதனைத் தூக்கிக் கொண்டு போய்விட்டனவாம்.

## 300 ஆடுகள் பலி

2007 ஆம் ஆண்டில் கொலம்பியாவில் பொயாக பிரதேசத்தில் 300 ஆடுகளைப் பலிகொண்ட அபூர்வ மிருகம் ஒன்றை அப்பகுதி விவசாயிகள் பிடித்து அந்நாட்டு தேசிய பல்கலைக்கழகத்திற்கு அனுப்பினர். ஆனாலும், ஆய்வுகளின் முடிவுகள் வெளியிடப்படவில்லை.

## சாம்பல் நிற நரி

2007 ஆம் ஆண்டு டெக்சாஸ் பிரதேசத்தில் அபூர்வமான மிருகம் ஒன்றின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மிருகம் சுபகப்ராவாக இருக்கலாம் என்ற நோக்கில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது அதுவும் அபூர்வமான சாம்பல் நிற நரி என்பது புலனாகியது.

## பிலிப்பைன்ஸில் சுபா

2008 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி இந்த சுபகப்ரா பற்றிப் பிலிப்பைன்ஸிலும் செய்திகள் பரவின. அங்கு சில பகுதிகளில் இரவில் பண்ணைகளுக்குள் நுழைந்து கால்நடைகளின் இரத்தத்தை உறிஞ்சும் மிருகம் ஒன்றை மக்கள் கண்டுள்ளனர். அம்மிருகம் நாயின் உருவம் போன்று இருந்ததுடன், விகாரமான தோற்றத்தை உடையதாகவும் இருந்ததாகக் கூறியுள்ளனர்.

## லத்தீன் அமெரிக்காவில் சுபா

இந்த இரத்தம் உறிஞ்சும் மிருகம் பற்றிக் கேட்டவுடன் இலத்தீன் அமெரிக்காவின் சில பகுதிகளில் வாழும் மக்கள் பீதி கொள்கின்றனர். காரணம் அதன் தோற்றமாகும். இந்த மிருகம் 412 அடி நீளம் உடையதாகவும் சுமார் 20 அடி அளவு தூரத்திற்குப் பாய்ந்து செல்லக்கூடியது என்றும் கூறுகின்றனர்.

இந்த மிருகத்தின் முகம் மனித முகத்தின் தோற்றமாகவும் பார்வைக்கு உருண்டையான பெரிய இரு கண்களும் அலறி ஓலமிடும்போது கண்கள் பார்ப்பவர்களை அச்சமடையச் செய்யும் வகையாக இரத்தம் போன்று சிவப்பு நிறத் தோற்றம் பெறுவதாகவும் கழுத்துப் பகுதியில் இருந்து வால் வரையில் முட்கள் நிறைந்து காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. சாதாரண பார்வைக்கு ஒரு சிறிய கரடி போன்று இருந்தாலும் அச்சம் தரும் வகையான விகாரமான தோற்றம் உடையது என்றும் வர்ணிக்கப்படுகின்றது.

யாரும் இரவில் இம்மிருகத்தைப் பார்த்துவிட்டால் 'கந்தக' வாசனை போன்ற மனிதர்களால் சுவாசித்துத் தாங்கிக்கொள்ள முடியாத துர்நாற்றத்தை வெளிப்படுத்தி மறைந்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும், இத்தகைய தகவல்கள் அது இரத்தம் உறிஞ்சும் மர்மப் பிராணிதான் என்பதை ஊர்ஜிதம் செய்யப்போதியதாக இல்லை.

## இலங்கையிலும்

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் இரவில் கால்நடைகள் இருக்கும் இடங்களுக்கு மர்மமான முறையில் வந்துபோகும் இவ்வாறான ஓர் உயிரினம் பற்றிய கதைகள் உலா வருகின்றன. அதனை கோபாலா அல்லது மூர்க்கப் பேய் என்று அழைக்கின்றனர். இந்த உயிரினம் இரவில் பசுக்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று அவற்றின் மடியில் தொற்றிப் பாலை உறிஞ்சிக் குடித்து விட்டுச் செல்வதாக இப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

அதேவேளை, ஆடு, மாடு, கோழி போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகளை கழுத்தில் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் பேய் என்றும் இதனைக் கூறுகின்றனர். ஆனால், மர்மமான முறையில் கால்நடைகள் இறந்து கிடந்தால் இந்தப் பேய் வந்து விட்டுப் போய் இருக்கலாம் என்றும் பேசிக் கொள்கின்றனர். இவை வெறும் கதைகள் மட்டுமே. அத்தோடு நம்பிக்கைகளுமாகும். ஆனால், எவரும் நேரடியாக இவ்வாறான உயிரினத்தைக் கண்களால் பார்த்ததில்லை.

## 80 வகையான வெளவால்கள்

உலகில் 80 வகையான வெளவால் இனங்கள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இவை பழங்கள், பூக்கள், இலைகுழைகள், தாவரங்கள் என்பவற்றை உணவாகக் கொள்கின்றன. சில வகையான வெளவால்கள் உயிரினங்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பவையாகவும் இன்னும் சில மாமிச உண்ணிகளாகவும் உள்ளன.

இந்த வெளவால்கள் மறைவிடங்களில் இருந்து இருட்டிய பின்பு வெளியில் வந்து அதிகாலையாகும்போது மறைவிடங்களுக்குச் சென்று விடுகின்றன. இவற்றின் உருவம் பெரியதாகவும் சிறியதாகவும் இன்னும் சில உள்ளங்கையளவு பருமன் உடையனவாகவும் உள்ளன.

எனவே, மக்கள் மத்தியில் எத்தகைய நம்பிக்கைகள் இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் இவ்வகை வெளவால்கள் அல்லது வேறு விலங்குகள் கால்நடைகள் உள்ள இடங்களுக்குச் சென்று தமது கைவரிசையைக் காட்டி விடுவதாக இருக்கலாம். இந்த உயிரினங்களை பேய், பிசாசு, மோகினி, சுபகப்ரா என்றெல்லாம் கூறிக்கொண்டு பீதியடையும் மக்கள் அநேகர் இருக்கின்றனர்.

அதனால்தான் இவைபற்றி எவ்வளவு ஆய்வுகள் மேற்கொண்டாலும் கிடைக்கும் எந்தவித தடயப் பொருளும் அவற்றை உறுதிப்படுத்துவதற்குப் போதுமானவையாக இருப்பதில்லை.

**அமீர் ஹுசைன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செந்தரவுப் புத்தகம் என்றால் என்ன?

IUCN

International Union for the Conservation of Nature and natural resources

அழியும் அச்சுறுத்தலை எதிர் நோக்கியிருக்கும் உயிர்கள் தொடர்பான சரியான தகவல் களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டதை அடுத்தே, 'செந்தரவுப் புத்தகம்' (Redlist) குறித்த தேவை ஏற்பட்டது. அதன்படி, 2000 ஆம் ஆண்டில் முதல் தடவையாக தாவர, விலங்கினங்கள் ஒரே தரவில் சேர்க்கப்பட்டு, வகைப்படுத்த லுக்கு உட்படுத்தப்பட்டன.

Redlist (செந்தரவு) என அழைக்கப்பட்டாலும் அது புத்தக வடிவிலேயே அமைந் துள்ளது. அதனாலேயே 'செந்தர வுப் புத்தகம்' என அழைக்கின் றோம். இதன் விசாலத்தன்மை காரணமாக புத்தகமாகப் பிரசு ரிப்பதில் சிரமம் உள்ளது. ஆகவே, மின்னியல் ஊடகமாக இது வெளியிடப்படுகின்றது. www.iucnredlist.org எனும் இணையத்தளமூடாக இதனைப் பார்வையிடலாம். வருடத் துக்கொருமுறை இத்தரவுகள் வெளியிடப்படுவதோடு, 5 வரு டங்களுக்கு ஒருமுறை கணக் கெடுப்பு நடத்தப்படுகின்றது.

செந்தரவுப் புத்தகமானது 9 தொகுதிகளைக் கொண்டது.




- அழிவடைந்த உயிரினங்கள். (Extinct)
- இயற்கையாக அழிவடைந்த உயிரினங்கள். (Extinct in the wild)
- ஆபத்தான அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்கள். (Critically endangered)
- அச்சுறுத்த லுக்கு உள்ளான உயிரினங்கள். (endangered)
- அழிவுக்குள் ளாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றவை. (Vulnerable)
- அச்சுறுத்தலை எதிர்நோக்கக் கூடியவை. (Near threatened)
- குறைந்த அச்சுறுத்தலுக்கு உட்பட்டவை. (Least concern)
- தரவுகள் குறைவானவை. (Data dencient)

ஓர் உயிரினத்தின் கடைசி உயிரி னமும் அழிவடைந்திருக்கலாம் என ஊகிக்கப்படுமிடத்து, அவ் உயிரினம் 'அழிவடைந்த உயிரி னம்' ஆக அடையாளப்படுத்தப்ப டுகின்றது. இது (Ex) என்ற எழுத் துக்களால் குறிப்பிடப்படுகின்றது. இயற்கைச் சூழலில் காணக்கி காவிட்டாலும் உயிரியல் பூங்கா, புகலிட நிலையங்களில் காணக் கூடிய உயிரினங்கள் (Ew) எனும் எழுத்துக்களால் குறிக்கப்படுகின் றன. அழியும் அச்சுறுத்தலுக்கு ஆளாகலாம் என எதிர்பார்க்கப் படும் உயிரினங்கள் (Cr) எனும் எழுத்துக்களால் குறிக்கப்படுகின் றன.

2000 ஆம் ஆண்டிலிருந்தே அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்கிய தரவுப் புத்தகம் வெளியிடப்பட்டபோதும் 1963 ஆம் ஆண்டிலிருந்தே இந்த தரவு கள் வெளியிடப்பட்டுக் கொண்டி ருக்கின்றன. எனினும், இத்தரவுகள் தனித்தனி உயிரினங்கள் பற்றிய தனித்தரவாகவே வெளியிடப்பட் டன. உலக புகலிடச் சங்கத்தின் இலங்கைக் காரியாலயத்தினூடாக இலங்கையில் அழியும் அச்சுறுத்த லுக்குள்ளாகியுள்ள, அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் குறித்த தகவல் கள் அடங்கிய இலங்கை செந்தர வுப் புத்தகம் அமைக்கப்படும்.




IUCN இன் தலைவர் மொஹமட் வாலி மூஸா

IUCN இன் பணிப்பாளர் அச்சிம் ஸ்டெய்னர்

**"நான் காட்டுவாசிகளில் கடும் போக்காளன். அதைத்தவிர, வேறொன்றும் அறியேன். அமெரிக்காவில் பரந்து செல்லும் பாரிய நிலப்பரப்பில் அமைந் துள்ள 'ப்ரெயரி' புல்வெளி ஊடாகப் பயணிக்கும் புகையிர தத்தில் இருந்து சுட்டுக்கொல்லப் பட்டு,அழுகிப் போகும் ஆயிரக்க ணக்கான எருமைகளின் இறந்த உடல்களை நான் பார்த்திருக்கி றேன். எருமைகளை விட புகையி ரதம் எந்தளவுக்கு முக்கியமானது என்பது மட்டும் எனக்குப் புரிய வில்லை. மிருகங்கள் இல்லாத உலகில் எவ்வாறு மனிதனால் வாழமுடியும்? சகல மிருகங்களும் அழிந்து போனால் வாழ்க்கையில் தனியாக விடப்படும் மனிதனும் அழிந்து போவான். உலகில் உள்ள அனைத்தும் ஒன்றுடன் ஒன்று கட்டுண்ட உறவுடையதா கவே காணப்படுகின்றன"**

மேற்குறித்த கருத்தானது செவ் விந்தியர்களின் முன்னாள் சிரேஷ்ட தலைவராகிய சியெட்டல் 1854 இல் நிகழ்த்திய உரையொன்றில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதியாகும். அன்று இவ்வுரையி னூடாக சியெட்டல் அப்போதைய ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி யாகிய பிரேங்ளின் பியர்ஸ் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். அதில் மிருகங்க ளுக்கும் பறவைகளுக்கும் ஏற்படும் அழிவே விரை வில் மனிதனுக்கும் ஏற்ப டும் எனக் குறிப்பிட்டார். அதனை மனிதர்களாகிய நாம் தற்போது மறந்துள் ளோம்.



சர்வதேச புகலிடச் சங்கத்தின் தலைமையகம் IUCN

## புகலிடச் சங்கம்

அச்சுறுத்தலுக்கு உள் ளாகி இருக்கும் பல்வகை உயிரினங்கள், தாவரங்கள் குறித்து ஆய்வுகளை நடாத் துவதற்காக 1948இல் 'சர்வதேச புகலிடச் சங்கம்' (International Union for the Conservation of Nature and natural resources) உருவாக்கப்பட் டது. இச்சங்கமானது உல கெங்கும் பரவி வாழும் உயிரினங்கள் குறித்தும் தாவரங்கள் குறித்தும் ஆய் வுகளையும் அவதானங்க ளையும் மேற்கொள்வ தோடு,அவற்றின் பாது காப்பு நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது.

(9ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவடைந்து செல்லும் உயிரினங்கள் சில....

**2006 ஆம் ஆண்டின் இறுதிவரை 40,177 உயிரினங்கள் செந்தரவுப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதுவரை 784 வகையான உயிரினங்கள் அழிந்து போய்விட்டதாக உத்தியோகபூர்வ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவற்றில் 65 வகையானவற்றை மீண்டும் உருவாக்க முடியுமா? என்பது குறித்து இப்பொழுது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2006 ஆம் ஆண்டுக்கான பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்ட சில உயிரினங்களின் விபரங்கள் இதோ;**

## பூஞ்சணம் - *Funcia di basilico*

பூஞ்சணமானது பிரதேசம் முழுவதும் பரவி வளரும் ஒரு தாவரமாகும். காளானும் பூஞ்சண வகையைச் சேர்ந்ததே. மிக மோசமான முறையில் அழிவுக்கு உள்ளான 'காளான்' இனமொன்று 2006 ஆம் ஆண்டு செந்தரவுப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனை Pleurotus nebrodensis என அழைக்கின்றனர்.

இந்த வகையான காளானை வட சிசிலி (இத்தாலி) பிரதேசத்தில் மாத்திரமே காணக்கூடியதாக உள்ளது. அதன்படி, இந்த வகையான காளான்கள் உலகில் 250 இற்கு மேல் இல்லை என



உறுதி செய்யப்பட்டுள்ளது. அபூர்வமான, அரியதொரு தாவரமாக இந்தக் காளான் இருக்கின்றமையால் அதன் பெறுமதியும் அதிகரித்துச் செல்கின்றது.

## ஈருடக வாழிகள்

### நீல விஷத் தவளை
*Blue Poison Frog*



உயிரினங்களைச் சேகரிக்கும் சட்டவிரோத செயற்பாடுகள் சர்வதேச ரீதியாக இன்று தீவிரமடைந்துள்ளன.

இச்செயற்பாடுகளினால் நீல விஷத் தவளைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. Dendrobates azureus எனும் விலங்கியல் விஞ்ஞானப் பெயரால் இது அழைக்கப்படுகின்றது.




(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் அங்கத்துவங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன;

தேசிய மட்டத்தில் செயல்படும் அரச சார்பற்ற அமைப்புகள் 735, அரச பிரதிநிதித்துவ அமைப்புகள் 110, அரச அங்கத்துவ அமைப்புகள் 83, சர்வதேசமல்லாத அமைப்புகள் 82, அனுசரணை அமைப்புகள் 32.

இதன்படி முழு அங்கத்துவ அமைப்புக்களின் தொகை 1042 ஆகும். பல்தேசிய, பலஇன, பல்வேறு கலாசார மற்றும் பல்வேறு மொழி பேசும் மக்கள் அமைப்புகள் பலவும் உலக புகலிடச் சங்கத்துடன் கைகோர்த்து செயல்படுகின்றன. ஆயிரம் தனிச்செயற் குழுக்களுடன் அவர்கள் 62 நாடுகளில் இருந்து தமது சேவையைப் புரிகின்றனர்.

1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சங்கம் அக்காலத்தில் International Union for The Protection of Nature (IUPN) என அழைக்கப்பட்டது. இயற்கை தர்மத்தைப் பாதுகாக்கும் சர்வதேச சங்கம் என்பதே அதன் அர்த்தமாகும். எனினும், சங்கத்தின் செயற்பாடுகள் விரிவடைந்ததை அடுத்து அதன் பெயரிலும் மாற்றம் ஏற்பட்டது. அதன்படி IUCN எனும் சொல்லைப் பயன்படுத்தினர். அச்சொல் 1956 முதல் நடைமுறைக்கு வந்தது.

### சங்கத்தின் செயற்பாடுகள் (சுருக்கமாக)

மனிதனின் தவறான அணுகுமுறையால் உலகில் இயற்கை வளங்கள் அனைத்தும் பாரிய அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன. இதுவரை 16119 வகையான உயிரினங்கள் மிகுந்த நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளன.

அவ்வாறு அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள உயிரினங்களின் தகவல்களைச் சேகரித்து செந்தரவுப் புத்தகத்தை நடாத்திச் செல்வது இவ்வமைப்பின் அடிப்படைச் செயற்பாடாகும்.

- பல்வகை உயிரினங்கள் குறித்த தகவல்களை சேகரித்தல். அதனை எப்பொழுதும் நடைமுறைப்படுத்துதல்.
- நெருக்குதலுக்கு ஆளாகியுள்ள பல்வகை உயிரினங்கள் குறித்து அந்தந்த நாடுகளுக்கு அறிவூட்டல்.
- அவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டதிட்டங்களை உருவாக்கல்.
- சூழல் மற்றும் வளிமண்டலம் குறித்த அறிவூட்டலை விநியோகித்தல்.
- ஒவ்வொரு நாட்டினதும் தேசிய கொள்கைத் திட்டமிடலாளரிடம் சூழல் பாதுகாப்புக் குறித்து தீவிர அவதானத்தையும் அக்கறையையும் ஏற்படுத்தல்.

## தாவர வகைகள்



### ஃபேவெரோ டி வில்சன்
*Favero de wilson*

தென் அமெரிக்காவின் பிரேசில் நாட்டில் காணக்கூடிய ஒருவகைத் தாவரமாகும். Dimorphandra wilsonii எனும் தாவரவியல் விஞ்ஞானப் பெயரால் இது அழைக்கப்படுகின்றது.இயற்கைச் சூழலில் இத்தாவர இனத்தில் தற்பொழுது எஞ்சியிருப்பதோ பத்து வளர்ந்த மரங்களும் ஆறு கன்றுகளும் மாத்திரமே.

பிரேசில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பாரிய காடழிப்பு நடவடிக்கைகளின் காரணமாக இத்தாவரம் அழிவின் விளிம்பினை எட்டியுள்ளது.

### பெல்லிட் ஸ்கியுல் - *Pallid Squill*

இத்தாவரத்தை சைப்ரஸ் நாட்டின் மூன்று இடங்களில் மாத்திரமே காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த மூன்று இடங்களிலும் மொத்தம் 600 தாவரங்கள் மாத்திரமே காணப்படுகின்றன. Scilla morrisii எனும் தாவரவியல் விஞ்ஞானப் பெயரால் இது அழைக்கப்படுகின்றது.



### ஃபெமினியாசியா - *Femeniasia*



Femeniasia balearica எனும் தாவரவியல் விஞ்ஞானப் பெயரால் அழைக்கப்படும் இது ஒருவகைப் புதர் இனமாகும். பெலரிக் தீவுகளிலும் ஸ்பெய்ன் நாட்டிலும் தேசிய தாவரமாகக் கொள்ளப்படுகின்றது. தற்பொழுது இதில் 2200 புதர்களையே காணக்கூடியதாக இருக்கின்றது. பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் இப்புதர்களில் முட்கள் நிறைந்து காணப்படுவதாலும் இவை அழிக்கப்படுகின்றன. மற்றும் Tropinota hirta எனும் உயிரியல் விஞ்ஞானப் பெயரால் அழைக்கப்படும் ஒருவகை வண்டினம் இந்தத் தாவரத்தின் பிரதான எதிரியாகக் கருதப்படுகின்றது. இந்த வண்டுகள் இத்தாவரங்களை உணவாகக் கொள்வதனாலும் இவை முழுமையாக அழிகின்றன.

## ஜந்துகள்

### நடனமாடும் தங்கத் தும்பி
*Golden Dancing Jewel*



Platycephala auripes எனும் உயிரியல் விஞ்ஞானப் பெயரால் இது அழைக்கப்படுகின்றது. தற்பொழுது ஆபிரிக்காவின் தன்சானியா நாட்டின் வனாந்தரங்களில் இதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த ஜந்தினத்தின் அழிவுக்குரிய காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

### மின்னும் மெக்ரோமியா தும்பி
*Shining Macromia Dragonfly*



பிரான்ஸ் நாட்டிலும் லெபனான் நாட்டிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஒரு தேசிய உயிரினமாக வாழ்கின்றது. Macromia Splendens எனும் உயிரியல் விஞ்ஞானப் பெயரால் அழைக்கப்படுகின்றது. இந்த உயிரினத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது சற்று சிரமமானதாகும். புதிய புள்ளி விபரங்களின்படி, இந்த ஜந்தினம் அபூர்வமானதொரு உயிரினமென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கெபொன்

| | |
|---|---|
| தலைநகரம் | : லிப்ரவில் |
| பெரிய நகரம் | : லிப்ரவில் |
| தேசிய மொழி | : பிரெஞ்ச் |
| அரசு | : குடியரசு |
| ஜனாதிபதி | : எல்ஹட்ஜ் உமர் போங்கோ ஒண்டிம்பா |
| பிரதமர் | : ஜீன் யெங்ஹி டொன்க் |
| மொத்த நிலப்பரப்பு | : 267,745 சதுர கிலோமீற்றர். (இதில் 3.76% நன்னீர்த் தேக்கமாகும்) |
| நாணயம் | : மத்திய ஆபிரிக்க ஃப்ரேங் |
| காலம் | : கிரீன்வீச் நேரத்தைவிட ஒரு மணி முன்பதாக |
| இணையத்தளக் குறியீடு | : .ga |
| சர்வதேச தொலைத்தொடர்பு இலக்கம் | : +241 |





## அமைவிடம்

ஆபிரிக்காவின் பணக்கார நாடுகளில் ஒன்றாகிய கெபொன், மேற்கு மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்று. ஒரு சட்ட அவையைக் கொண்ட பல கட்சிக்குடியரசு. ஒன்பது மாகாணங்களையும் 37 மண்டலங்களையும் கொண்டுள்ளது. மேற்கில் 'அட்லாண்டிக்' சமுத்திரமும் வடக்கில் ஈக்வடோரியல் கினியா மற்றும் கெமரூனும் கிழக்கிலும் தெற்கிலும் கொங்கோ குடியரசும் காணப்படுகின்றது.

## தரைத்தோற்றம்

இங்கு பெரும்பாலான பிரதேசங்களில் வெப்பக் காடுகளே உள்ளன. நாட்டின் உட்பகுதியில் மலைகளும் உயர்ந்த பீடபூமிகளும் நிறைந்து காணப்படுகின்றன. மத்திய




கோட்டுக் காலநிலை இலட்சணங்களை இந்நாடு கொண்டுள்ளது.

## இனமும் மதமும்

பல்வேறு இனக்குழுக்கள் காணப்படுவதோடு, 'பண்டு' கோத்திரத்தார் பிரதான இனக்குழுவினராகத் திகழ்கின்றனர். இக்குழுவினர் நான்கு இனக்குழுக்களாகப் பிரிந்துள்ளனர். இவர்களைத் தவிர ஐரோப்பியர், பிரான்ஸியர் சிறுபான்மையினராக வாழ்கின்றனர்.

இவர்களில் பெரும்பான்மையோரின் பிரதான மதமாக 'கிறிஸ்தவம்' திகழ்கின்றது. இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுவோரும் சிறுபான்மையினராக வாழ்கின்றனர்.

## வரலாறு

கி.மு 7000 ஆம் ஆண்டிற்கு முன் கெபொனின் தெற்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் 'பண்டு' கோத்திரத்தாரின் உப இனக் குழுவாகிய பெபின்கா மற்றும் பிக்மி இனக்குழுவினர்கள் வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது. எனினும், இன்று இங்கு பல்வேறு வகையான கோத்திரத்தார் வாழ்கின்றனர்.

போர்த்துக்கேய நாடுகாண் பயணியாகிய 'டிகோ கேம்' என்பவரால் 15 ஆம் நூற்றாண்டில் கெபொன் நாடு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்டது. 1472 இல் போர்த்துக்கேய நாடுகாண் பயணிகள் 'கோமோ' நதியின் கழிமுகத்தைக் கண்ணுற்றதோடு, அதனை 'ரியோ டி கெபொன்' என பெயர் மாற்றம் செய்தனர். பிற்காலத்தில் அந்த நதிக்கும்



நதியின் கழிமுகத்திற்கும் வழங்கப்பட்ட கெபொன் எனும் பெயரே முழு நாட்டினதும் பெயராகக் கொள்ளப்பட்டது.

அதன்பின், முறையே 1593 இல் ஒல்லாந்தரும் 1630 இல் பிரான்ஸியரும் இந்நாட்டிற்கு வருகை தந்தனர். 1839 இல் பிரான்ஸியர் தமது முதலாவது ஆட்சி அதிகாரப் பிரதேசத்தை 'கெபொன்' நதியின் இடது கரையில் ஏற்படுத்தினர். நாளடைவில் அது படிப்படியாக விரிவடைந்து, 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் முழுமையாக இப்பிரதேசத்தைக் கைப்பற்றினர். அதன்படி, 1888 இல் இப்பிரதேசம் பிரான்ஸின் ஒரு பகுதியானது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பிரான்ஸிய நாட்டினுள் வரையறுக்கப்பட்ட சுயாட்சி உருவாக்கப்பட்டதோடு, 1960 ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி கெபொன் ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

## பொருளாதாரம்

சூழவுள்ள ஏனைய நாடுகளை விட செல்வம் நிறைந்த நாடாக விளங்கும் கெபொன்








நாட்டின் பொருளாதாரம் 1970முதல் கனிய எண்ணெய் கைத்தொழிலை மையமாகக் கொண்டுள்ளது. எண்ணெய் ஏற்றுமதி மூலம் நாட்டின் மொத்த வருமானத்தில் 50% ஐ பெற்றுக்கொள்கின்றது.அதற்கு அடுத்ததாக மகோகனி,கருங்காலி, றப்பர் ஆகிய மரவகைகளும் தங்கம், யுரேனியம், இரும்பு முதலிய கனிய வளங்களும் காடுகளுக்கருகில் உள்ள பிரதேசங்களில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.

கெபொனின் கைத்தொழில் துறையைப் பொறுத்தவரை பெற்றோலியம், ரசயானப் பொருட்கள், புடைவை,மரஉற்பத்தி,உணவு மற்றும் பானவகைகள் என்பன பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகின்



றன. நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் விவசாயத்திலேயே ஈடுபட்டுள்ளனர். மரவள்ளி, வாழை என்பனவற்றை அதிகமாக உற்பத்தி செய்கின்றனர். அதேபோல் மீன்பிடித்தொழிலிலும் குறைந்த எண்ணிக்கையானோர் ஈடுபடுகின்றனர்.

கெபொன் நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளில் பங்காளிகளாக ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், சீனா, தாய்லாந்து, நெதர்லாந்து மற்றும் கெமரூன் ஆகிய நாடுகள் திகழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர இலங்கையின் தேசிய அடையாளங்கள்




தேசிய கொடி



தேசிய இலச்சினை

**தேசிய கீதம்**

ஸ்ரீலங்கா தாயே
நம் ஸ்ரீலங்கா
நமோ நமோ நமோ
நமோ தாயே.....



தேசிய மரம்
நாக மரம்



தேசிய மலர்
நீல அல்லி



தேசிய பறவை
காட்டுக் கோழி

**தேசிய மொழிகள்**

சிங்களம், தமிழ்

**பிரதான மதங்கள்**

பௌத்தம்
இந்து
கிறிஸ்தவம்
இஸ்லாம்



தேசிய விளையாட்டு
கரப்பந்தாட்டம்

## 2008 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



புத்தளம், இந்து மத்திய கல்லூரி மாணவர் ருஷ்தி அஹமட், 121 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் புத்தளத்தைச் சேர்ந்த எம்.சி.நிஜாம்-மஸாஹிரா தம்பதியின் புதல்வர் ஆவார்.

(தகவல்: என்.எம்.தன்வீர்)



பண்டாரகமை, அடுலுகமை ஹொ/அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.கே.இஸ்ரத் கமால், 118 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



கல்முனை, இராமகிருஷ்ணமிஷன் மகா வித்தியாலயத்தின் மாணவர் வி.பிரகலாதன், 122 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் வித்தியானந்தன்-குணவதி தம்பதியரின் புதல்வர் ஆவார்.

தகவல்: நிப்ராஸ் மன்சூர்
(விஜய் இளம் செய்தியாளர்)



பாணந்துறை, எலுவிலை அலவியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.இஸட்.எஃப்.சுமானா, 139 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் எலுவிலையைச் சேர்ந்த மொஹமட் ஸியாட்-பாத்திமா நிஸாரா தம்பதியரின் புதல்வியாவார்.


## வீட்டிலிருந்தே ஆங்கிலம் கற்க இலகு வழி.

## " The BEST " ENGLISH HOME STUDY PACK WITH CD'S

JEI கல்வி நிலையம் வழங்கும் ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகங்களையும் CD களையும் கற்பதற்கு கேட்பதற்கு ஒரு நாளைக்கு 45 நிமிடங்கள் காலையில் / மாலையில் செலவிட முடியுமெனில் 45 நாட்களின் முடிவில் உங்களாலும் சரளமாக ஆங்கிலத்தில் பேச முடியும்.

### " THE BEST " ENGLISH HOME STUDY PACK ஒன்றில் அடங்குபவை

1. 13 ஆங்கில பேச்சு பயிற்சி இலக்கண புத்தகங்கள். ஒரு பாடத் தொகுதியை 3 நாட்கள் கற்க வேண்டும். இதற்காக காலையில் மாலையில் 45 நிமிடங்களை ஒதுக்கி கற்க வேண்டும்.
2. ஆங்கில தமிழ் அகராதி. (Lifco English Tamil Dictionary) இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது
3. Spoken English -Video Cd. (ஆங்கில பேச்சு பயிற்சி வாசிப்பு அடங்கியது
4. 4 Spoken English - Audio Cd. ஆங்கில பேச்சு பயிற்சி இலக்கணம் அடங்கிய தமிழ் மொழி மூல விளக்கத்துடன் கூடிய 4 Mp3 CD கள். CD யில் அடங்கி இருக்கும் விடங்கள் யாவும் வழிகாட்டி புத்தகங்களில் அடங்குவதால் வழிகாட்டி புத்தகத்தை படித்தவாரே CD களை கேட்க வேண்டும். இதற்காக ஒரு நாளைக்கு 30 நிமிடங்களை ஒதுக்க வேண்டும்.
5. 2 AUDIO CD GUIDE BOOKS CD வழி காட்டி புத்தகங்கள் இரண்டு
6. JEI - BAG (அழகிய BAG)
7. சிங்கள பேச்சு பயிற்சி புத்தகம்.
8. THE NECKLACE - Short Story Book. தமிழ் விளக்கத்துடன் கூடிய சிறுகதை புத்தகம். 4 நாளைக்கு ஒரு பாகத்தை கற்று வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.
9. ANSWER SHEETS - விடை எழுதும் பத்திரங்கள்.

பயிற்சிகளுக்கு விடை எழுதி எமக்கு அனுப்ப வேண்டும். அவைகள் பிழை திருத்தப்பட்டு மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் மூலம் நீங்கள் விடும் பிழைகளை திருத்திக் கொள்ளலாம். பாடத் தொகுதிகளையும் CD களையும் கட்டாயமாக கற்க, கேட்க வேண்டும்.

நீங்கள் முயற்சி செய்தால் The BEST ENGLISH PACK பெற்று 45 நாட்களில் சரளமாக ஆங்கலத்தில் பேசலாம்.
( Study Pack இன் உள்ளே வழி காட்டி அட்டை காணப்படும் )

### மாணவர் அடையாள அட்டை

மாணவர் அடையாள அட்டை இலவசமாக வழங்கப்படும். பெற இரு புகைப்படங்களின் பின் பதிவு இலக்கத்தை குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். அட்டை பெறுவது கட்டாயமில்லை Pack ஐ பெற்றதும் அதன் உள்ளே உங்கள் பதிவு எண் காணப்படும்


### யாருக்கு பொருத்தமானது. ?

- Usa,Uk,Canada போன்ற நாடுகளில் உயர்கல்வி கற்க செல்ல இருப்பவர்கள்.
- Saudi arabia,Kuwait,Quatar நாடுகளில் தொழில் வாய்ப்புக்காக செல்ல இருப்பவர்கள்.
- IELTS, TOEFL போன்ற சர்வதேச பரீட்சைகளுக்கு தோற்ற இருப்பவர்கள்.
- உள்நாட்டில் தொழில் புரிபவர்கள்,
- தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்கள்,
- இல்லத்தரசிகள்- (HOUSE WIFE)
- பாடசாலை செல்லும் மாணவர்கள்.

### அரசாங்க அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

REG NO: CPC/KY/DS/2/2/5715

பாடநெறியை 45 நாட்களில் முடித்ததன் பின்னர் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும். இது பதிவு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. உள் நாட்டில் அல்லது வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகளை பெற உதவும்.



### HOME STUDY PACK ஐ பெறுவது எப்படி ?

" The BEST "ஆங்கில கற்கை பொதி ஒன்று ரூ. 2900/- மட்டுமே. நீங்கள் பெற விரும்பின் பின்வருமாறு SMS செய்யுங்கள்.

VJ இடைவெளி, உங்கள் Name Address, T.p no & Date Of Birth.என்பவற்றை

SMS 0777- 806 606

( உங்கள் பிறந்த தினத்தன்று அதிசயத்தக்க பரிசொன்றை பெறும் வாய்ப்பு உண்டு )

கற்கை பொதி தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பின்னர் கட்டணம் செலுத்தி தபால் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
அல்லது COMMERCIAL 80-400-52-644
HNB - 4157-3850-2904-0001
Ramzan Director Jei என்ற கணக்கில் ரூ 2600/- வைப்பு செய்து வீட்டு அறிவிக்கவும்.

### வீட்டுக்கே விநியோகம்

Colombo, Kandy & Gampaha மாவட்டங்களுக்கு நேரடியாக வீட்டுக்கே அனுப்பப்படும்

" The BEST " ENGLISH PACK P.O.Box.119.Kandy Tel .0814-92 91 93


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரின் உருவச்சிலை

சுதந்திர சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள டீ.எஸ். சேனாநாயக்காவின் உருவச்சிலையானது குறித்த இடத்தில் அமைப்பதற்கு முன் கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள முன்னைய நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அருகிலேயே அமைந்திருந்தது. அதனை அமைத்தவர் இங்கிலாந்தைச்சேர்ந்த கலைஞரான ஜேம்ஸ் வூட் கோர்ட் என்பவராவார். பிற்காலத்தில் திஸ்ஸ ரணசிங்க எனும் சிற்பி இலங்கையின் முதல் பிரதமரின் புதிய உருவச்சிலையை உருவாக்கியதால், அதனை காலிமுகத்திடலில் நிறுவிவிட்டு, பழைய உருவச்சிலையை சுதந்திர சதுக்கத்திற்கு அருகில் அமைத்தனர்.

**1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. அதன்படி, இந்த வருடம் இலங்கையில் 61ஆவது சுதந்திரதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.**

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் பல சுவையான அம்சங்கள் நிறையவே உள்ளன. இம் முக்கிய நிகழ்வுகளின் பெறுபேறாகவே 1948 இல் சுதந்திரம் கிடைத்தது. 1818 மற்றும் 1848 இல் ஏற்பட்ட ஆயுதக் கிளர்ச்சிகளானது அதில் முக்கிய நிகழ்வுகளாகும். சுதந்திரத்தால் இலங்கைக்கு பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் பல நன்மைகள் கிடைத்தன.

இலங்கை தேசிய சங்கத்தினால் அமைக்கப்பட்ட ஜனநாயக வழிப்போராட்டச் செயற்பாடுகளும் நாட்டின் இடதுசாரி இயக்கங்கள் கொண்டு சென்ற தீவிரமான போராட்டச் செயற்பாடுகளும் கவிஞர்கள் மற்றும் கலைஞர்களினது தீவிர போராட்டங்களுமே சுதந்திரப்போராட்டத்திற்கு கைக்கொடுத்து, சுதந்திரம் வழங்குவதைத் துரிதப்படுத்தின.

### சுதேச பாடசாலைகள்

1815 ஆம் ஆண்டு கண்டி ஒப்பந்தத்தின்படி, பௌத்த மதம் பாதுகாக்கப்படும் என ஆங்கில ஆட்சியாளர்கள் உறுதி அளித்தாலும் அதனை அவர்கள் சரிவரச் செயல்படுத்தவில்லை. அதுமட்டுமல்லாது இந்நாட்டின் பௌத்தம், இந்து, இஸ்லாம் ஆகிய சுதேச மதங்களையும் அம்மதங்களைப் பின்பற்றும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் கலாசாரங்களையும் அவர்கள் புறக்கணித்தனர்.

இம்மக்களின் மொழி, மத விழுமியங்களைப் பிரதிபலிக்கும் கல்விக்கூடங்களை அமைக்காது ஆங்கில மொழி மூலமான கிறிஸ்தவ கல்லூரிகளை ஆரம்பித்தனர். கல்வித்துறை கிறிஸ்தவ மிஷனரிமார்களிடம் கையளிக்கப்பட்டது. இதனால், சுதேச மக்களின் பிள்ளைகளுக்கு கல்விகற்கும் வாய்ப்பு அரிதாகவே இருந்தது. எனவே, சுதேச மொழி, கலாசார, மத உரிமைகளை பேண இலங்கையர்களால் சீர்திருத்த இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் விளைவாக நாடெங்கிலும் பரவலாக பௌத்த, இந்து, இஸ்லாமிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தென்பகுதியில் சில பௌத்த பிக்குகளின் முயற்சியினால் பழைய 'பிரிவினா' கல்விமுறை மீண்டும் தாபிக்கப்பட்டது. 1880 இல் இலங்கைக்கு வருகை தந்த ஒல்கொட் அவர்கள், பௌத்த மதத்தைத் தழுவி பௌத்த மத புனரமைப்புக்குப் பெரும் பங்காற்றினார். அவரின் தலைமையில் பல பாடசாலைகள் நிறுவப்பட்டன.




இவ்வாறு 1900 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 142 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அவற்றில் 18000 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்றனர்.

இதேவேளை, சைவப் பாடசாலைகளை நிறுவுவதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பெருந்தொண்டாற்றினார். அதேபோல், இஸ்லாமியப் பாடசாலைகளை நிறுவுவதில் டி.பி.ஜாயா அவர்களின் பங்களிப்பு அளப்பரியது.

இத்தகைய சுதேச மொழிக்கல்வி பாடசாலைகளும் சுதந்திரப் போராட்டத்திற்குப் பெரிதும் துணை புரிந்தன.

### இடதுசாரிகளின் போராட்டம்

கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி எஸ்.ஏ.விக்ரமசிங்ஹ, பிலிப் குணவர்தன போன்றவர்களின் தலைமையில் 1935 ஆம் ஆண்டில் இடதுசாரி இயக்கம் ஆரம்பமாகியது. இது இலங்கையின் சுதந்திரப் போராட்டத்திற்கு பெரிதும் கைக்கொடுத்தது. அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் பிரதான நோக்கு இலங்கைக்கு சுதந்திரம் பெறுவதற்குப் போராடுவது ஆகும்.

### கலால் இயக்கம்

பிரித்தானியரால் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மதுபாவனைப் பழக்கம் நாட்டில் பல சமூகச் சீர்கேடுகளுக்கு அத்திவாரமாக அமைந்தது.இதற்கெதிராக 'கலால்' இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.ஜேம்ஸ் பீரிஸ்,டி.பி.ஜயதிலக, மாக்ஸ் பெர்ணான்டோ, சி.ஏ. ஹேவாவிதான, டீ.ஆர்.விஜயவர்தன, டீ.எஸ்.சேனாநாயக்க போன்றோர் மதுபான பாவனைக்கெதிராக நடத்திய போராட்டங்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக மக்களை அணி திரட்டியது.

### இலங்கை தேசிய சங்கம்

1915 ஆம் ஆண்டு இந்நாட்டில் ஏற்பட்ட சிங்கள-முஸ்லிம் இனக்கலவரமானது நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் வடிவத்தை மாற்றியது. இந்நாட்டின் சகல மக்களும் ஐக்கியப்பட வேண்டும் என்ற எண்ணம் தலைவர்களிடையே மேலோங்கியது. இக்கருத்தை அடிப்படையாக வைத்தே 'இலங்கை தேசிய சங்கம்' உருவாக்கப்பட்டது. இம்முயற்சியில் ஈடுபட்டவர் சேர்.பொன்னம்பலம் அருணாசலம் ஆவார். இவரே இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

### சுதந்திரம் பெறல்

இலங்கையர்களின் மேற்குறித்த தொடர் போராட்டங்களின் விளைவாக இந்நாட்டு மக்களுக்கு கூடிய அதிகாரத்தை வழங்கக்கூடிய


சேர்.பொன்.அருணாசலம்


சேர்.பொன்.இராமநாதன்


ஆறுமுகநாவலர்


டி.பி.ஜாயா


சேர்.டி

பொருத்
உருவாக்
னிய அ
டொனமூ
யில் 192
குழுவை
யது. அச்
பல அ
களைச் ச
துக்களை
அறிக்கை
மூலம் அ
குழு மு
பட்டதே
சர்வஜன
பட்டதும்

தளமாகு
எமது அ
வில் சுத
கட்டத்
விளைவ
திரம் வ
மானத்தி
அரசு நிர்
படி இல
வழங்க
நியமிக்க
சோல்பரி
னார். சே
ஜனநாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




...ிஜயவர் ...க போன் ...க்கெதி ...ங்கள் ...பத்திற்கெ ...ட்டியது.

...சங்கம்

...ந்நாட்டில் ...ம் இனக்க ...ந்திரப் ...தை மாற் ...மக்களும் ...ான்ற ...டயே ...ந்தை

பொருத்தமான அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென பிரித்தானிய அரசு எண்ணியது. அதற்காக டொனமூர் பிரபுவின் தலைமையில் 1927 இல் ஓர் ஆணைக் குழுவை இலங்கைக்கு அனுப்பியது. அக்குழு இலங்கையிலிருந்த பல அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அவர்களின் கருத்துக்களை அறிந்து 1928 இல் ஓர் அறிக்கையை சமர்ப்பித்தது. அதன் மூலம் அரசுக்கழகம், நிர்வாகக் குழு முறை என்பன உருவாக்கப்பட்டதோடு, முதன்முதலாக சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதும் மிக முக்கியமான அடித்தளமாகும். இக்காலகட்டத்தில் எமது அயல்நாடாகிய இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தது. அதன் விளைவாக இந்நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கவேண்டும் என்ற தீர்மானத்திற்கு வர பிரித்தானிய அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. அதன்படி இலங்கைக்கும் சுதந்திரம் வழங்க ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதற்கு சோல்பரி பிரபு தலைமை தாங்கினார். சோல்பரி ஆணைக்குழு ஜனநாயகத்துடன் கூடிய சுதந்திர அரசியலமைப்பை உருவாக்கி, டொமினியன் அந்தஸ்துள்ள சுதந்திரத்தை வழங்கியது.

அவ் அரசியலமைப்பில் பிரதிநிதிகள் சபை, செனட் சபை என்ற இருசபைகளைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கு ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. நாடாளுமன்ற அங்கத்தவர்களை தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யும் பொருட்டு முதலாவது தேர்தல் 1947 ஓகஸ்ட் 15 ஆம் திகதி நடைபெற்றது. அதனை அடுத்து 1948 பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி டொமினியன் அந்தஸ்துள்ள சுதந்திர நாடாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டது.



...பா



சேர்.டி.பி.ஜயதிலக



டீ.எஸ்.சேனாநாயக்க



டீ. ஆர்.விஜயவர்தன

...த ...' உரு ...ற்சியில் ...னம்பலம் ...வரே ...ின் முத ...தெரிவு

...ல்

...ற்குறித்த ...ன் விளை ...கு கூடிய ...டிய

## சுதந்திரத்தோடு உருவான சுதந்திர சதுக்கம்

சுதந்திரத்தோடு எமக்குக் கிடைத்த சுதந்திர சதுக்கத்தையும் நாம் மறந்துவிடமுடியாது. 1949 முதல் அதிகமான சுதந்திர தின விழாக்கள் நாட்டின் தலைவர்களால் இந்த சுதந்திர சதுக்க பூமியிலேயே நடத்தப்பட்டன. டொரிங்டன் பிரதேசத்தில் அமைந்துள்ள சுதந்திர சதுக்கமானது இந்நாட்டின் தேசிய சுதந்திரத்தின் ஒரு நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றது.

டொரிங்டன் பூங்காவில் அமைதி தழுவும் ஓரிடத்தில் 1949 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இரண்டாவது சுதந்திர தின விழாவின்போது, சுபநேரத்தில் சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் டீ.எஸ்.சேனாநாயக்கவினால் அடிக்கல் நாட்டப்பட்டு, அதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின. அன்று முதல் நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக நிர்மாணப் பணிகள் நடைபெற்று, 1953 பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று சுபவேளையில் சுதந்திர சதுக்கம் மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

## சுதந்திர மண்டபம்

சுதந்திர சதுக்கத்தினுள் ஒரே நேரத்தில் 432 பேரும் கட்டடத்திற்கு வெளியே முன்பகுதியில் 25,000 பேரும் வசதியாக அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிடும் வாய்ப்புள்ளது. முன்பக்கத்தில் உயர்ந்த கொடிக்கம்பங்களுடன் கம்பீரமாக காட்சியளிக்கும் சுதந்திர சதுக்க மண்டபமானது செவ்வக வடிவில் அமைந்துள்ளது. இம்மண்டபம் கண்டி நகர 'கல்யாண மண்டப' அமைப்பில் கட்டப்பட்டிருப்பதோடு, அதனிலும் நிறைந்த கலையம்சங்களை கொண்டுள்ளது.

அநேகமான சுதந்திர விழாக்களின்போது நாட்டு ஜனாதிபதியால் சுதந்திர சதுக்கத்திற்கு முன்பக்கம் உள்ள பிரதான கம்பத்தில் தேசிய கொடி ஏற்றி வைக்கப்படும். சுதந்திர சதுக்கத்திற்குள் பிரவேசிப்பதற்கு இருபக்கமும் இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. தோட்ட மண்டபத்துக்குள் பிரவேசிக்க கொரவக்கற்களை உடைய படிக்கட்டுத் தொகுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மண்டபத்தைச் சுற்றி நாற்திசைகளிலும் அறுபது சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அலங்காரமான அறுபது தூண்கள் இம்மண்டபத்திலுள்ளன. இவற்றின் அடிப்பாகங்கள் தடிப்பானதாகவும் சதுரமானதாகவும் அமைக்கப்பட்டுள்ளதோடு, சற்று மேலே மலர்ச் செதுக்கல் அலங்காரம் காணப்படுகின்றது. இத்தூண்களின் அனைத்து செதுக்கல் வேலைப்பாடுகளும் கண்டி கல்யாண மண்டபத்திலும் எம்பக்கே தேவாலயத்திலும் உள்ள கலை வடிவங்களைப் பின்பற்றி உருவாக்கப்பட்டனவாகும். நுனிப்பகுதி எண்கோண அமைப்பையுடையது. இவற்றின் நாற்திசையிலும் வேலைப்பாடுகளுடைய 240 உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு அறைகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த மண்டபத்தின் உட்பகுதியில் மிக முக்கியமான சந்தர்ப்பங்களைப் பிரதிபலிக்கும் 28 உருவப் படங்கள் உள்ளன. புத்தரின் முதலாவது இலங்கை வருகை, மகிந்த தேரரின் இலங்கை விஜயம் போன்றவை மிக அழகான ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

–இரஞ்சித் ஜெயகர்



மகர தோரணத்துடனான நுழைவாயில்



செதுக்கல் வேலைப்பாடு



நாற்திசைகளிலும் அமைக்கப்பட்டுள்ள வேலைப்பாட்டுத் தொகுதி

## 'சுதந்திர தினத்தன்று நடப்பட்ட மாங்கன்று இன்று பெரிய மரமாக வளர்ந்துள்ளது'

***1948 இல் சுதந்திரத் தினத்தை கொண்டாட சுதந்திர சதுக்கம் இருக்கவில்லை. சுதந்திர விழாவின்போது கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பொல்வத்த ஸ்ரீ தர்மகீர்த்தி ராஜகீய விகாரையில் இலங்கையில் முதலாவது பிரதமர் கௌரவ டீ.எஸ். சேனாநாயக்க அவர்களின் தலைமையில் முதலாவது சுதந்திர தின உற்சவத்தின் மத அனுஷ்டானங்கள் நடைபெற்றன.***

***அலரி மாளிகையின் அருகில் அமைந்திருந்த ஸ்ரீ தர்மகீர்த்தி ராஜகீய விகாரைக்கு அதிகாலையில் பிரதமர் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்தனர். அக்காலத்தில் விகாராதிபதியாக இருந்தவர் அம்பகஹவத்தே இந்திர***

***சஹவரஞ்ஞான தேரர் ஆவார். தேரரின் வேண்டுகோளின் பேரில் விகாரையின் முன்னால் மாங்கன்றொன்று பிரதமரால் நாட்டப்பட்டது. இன்று அது வளர்ந்து பெரிய மரமாகி சுதந்திரத்தின் நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றது.***



டீ.எஸ்.சேனாநாயக்க அவர்களால் மாங்கன்று நாட்டப்பட்ட வேளை....



அன்று நாட்டப்பட்ட மாங்கன்று இன்று பெரிய மரமாக வளர்ந்துள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மிலூக்காவின் நாட்டுப் பற்று



முன்னொரு காலத்தில் ஆபிரிக்காவில் இரண்டு இன மக்கள் வசித்தனர். ஆனால், காரணம் என்ன என்று தெரியாமல் அவ்விரு இன மக்களும் பகைமையுடன் வாழ்ந்தனர். ஒரு பிரிவிலுள்ள நாட்டு மக்களுக்கு 'மிலூக்கா' என்பவன் தலைவனாக இருந்தான். அடுத்த பிரிவுக்கு 'உலூக்கா' என்பவன் தலைவனாக இருந்தான்.

அவ்விரு நாட்டுப் படையினரும் பலமாக மோதிக் கொண்டனர். இம்மோதலில் மிலூக்காவின் நாட்டு மக்களில் அதிகமானோர் உயிரிழந்தனர். மிலூக்கா இயற்கையாகவே ஒரு வைத்தியராக இருந்ததால் காடுகளில் வளரும் மூலிகைகளின் குணம் பற்றி நன்கு அறிந்திருந்தான். அவன் அபூர்வமான சில மூலிகைச் செடிகளைத் தேடிப் பிடித்து, ஒரு களிம்பு மருந்து ஒன்றைத் தயாரித்தான். பின்னர் போரில் காயமுற்ற வீரர்களின் காயங்கள் மீது அம் மருந்தைத் தடவினான். மறுநிமிடத்தில் அக்காயங்கள் காணாமல் போயின. இவ்வாறே, இறந்தவர்களின் மூக்கினுள் அக்களிம்பைத் தடவியதும் சிறிது நேரத்தில் அவர்கள் உயிர் பெற்று எழுந்தார்கள்.

பல நாட்கள் சென்ற பின் இந்த விடயத்தை உலூக்கா அறிந்து கொண்டான். ஒரு சமயம் மிலூக்கா அந்த ரகசியத்தை தன் மகன் ஒகாயாவுக்குச் சொல்லிக் கொடுத்து, மகனை அழைத்துக் கொண்டு காட்டிற்குச் சென்றான்.

அப்போது உலூக்காவின் நாட்டுப்படைகள் அவர்களைப் பிடித்துச் சென்று உலூக்கா முன் நிறுத்தியது.

''மிலூக்கா, அபூர்வ மருந்து தயாரிக்கும் ரகசியத்தை என்னிடம் கூறி விடு, இல்லாவிடில் உங்கள் இருவருக்கும் மரணம் சம்பவிக்கும்'' என்றான்.

''நீ எங்களை என்ன செய்தாலும் நாம் அதைக் கூற மாட்டோம்'' என்று இருவரும் உறுதியாகக் கூறினார்கள். அவர்களைப் பலவாறு சித்திரவதை செய்தும் சொல்லாததால் ''இந்த இருவரையும் நான் அணு அணுவாக வெட்டிக் கொல்லப்போகிறேன்'' என உலூக்கா கூறியதும் சிறுவனான ஒகாயா பயந்துவிட்டான். இதைக் கண்ட மிலூக்கா தன் மகன் மருந்து தயாரிக்கும் ரகசியத்தைக் கூறி விடுவானோ என அஞ்சி உலூக்காவை தனியாக அழைத்து இவ்வாறு கூறினான்.

''நான் அந்த ரகசியத்தை உன்னிடம் கூறுவதை என் மகன் அறியக்கூடாது. அவன் அறிந்தால் என் நாட்டு மக்களிடம் கூறி விடுவான். அதனால், எனது மகனைக் கொன்று விடு'' என்றான். உடனே உலூக்கா ஒகாயாவைக் கொன்று விட்டு மிலூக்காவிடம் ரகசியத்தைக் கேட்டான்.

மிலூக்காவோ ''நான் அந்த ரகசியத்தைக் கூறமாட்டேன்'' என்றான். அதைக் கேட்டுக் கோபம் கொண்ட உலூக்கா ''அப்படியானால் உனது மகனை ஏன் கொல்லச் சொன்னாய்?'' என்று கேட்டான். ''உன் மிரட்டலால் எனது மகன் பயந்து ரகசியத்தைக் கூறி விடுவானோ என நான் அஞ்சி அவனைக் கொல்லச் சொன்னேன். என் உயிர், என் மகன் உயிர் போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என் மக்கள் அழிய நான் இணங்க மாட்டேன். எனக்கு என் நாடுதான் முக்கியம்'' என்று சொன்னான். பின்னர் அருகிலிருந்த மலையில் ஏறி ஆழமான ஏரியில் குதித்து தற்கொலை செய்து கொண்டான் மிலூக்கா.

இதைக் கண்ட உலூக்காவின் மனம் உருகியது. அன்றிலிருந்து போர் புரிவதை நிறுத்தி மிலூக்காவின் நாட்டு மக்களோடு ஒற்றுமையாக வாழ்ந்தான்.

***'நாட்டுப் பற்று மிக்க இந்த வீரத்தியாகியின் கதை கேட்பவர் மனதையும் நிச்சயம் உருக்கியிருக்கும்'***

எம்.எல்.எஃப்.ஹஸ்னா,
இ/பாலர் இயேசு கன்னியர் மடம்,
தேசிய பாடசாலை இரத்தினபுரி.




கல்வியே வேண்டும் வாழ்வில்
கல்வியே வேண்டும்
செல்வமே வேண்டும் கல்விச்
செல்வமே வேண்டும்.

புண்ணியம் செய்தே பாரில்
புகழ் பெற்று வாழ வேண்டும்.
அன்பெனும் வழியில் சென்றே
அகிலத்தை ஆள வேண்டும்.

கற்றவரோடு சேர்ந்து
கல்வியைப் பெருக்க வேண்டும்.
மற்றவர் கௌரவத்தை
மாண்புடன் பேண வேண்டும்.


அந்நிய மதத்தாரோடும் - நாம்
அன்புடன் பழக வேண்டும்.
பண்பெனும் சிகரம் நின்று
பகைவரை வெல்ல வேண்டும்.

எம்.எப்.எம்.பர்ஸானா,
மில்லத் மஹதிர் வித்., காத்தான்குடி.

# அறிவியல் தகவல்கள்



**★ உலக சுகாதார நிறுவனம் (WHO) வெளியிட்டுள்ள ஒரு திடுக்கிடும் செய்தி. உலகில் ஒவ்வொரு பத்து விநாடிக்கு ஒருவர் புகையிலைத் தயாரிப்புக்களினால் ஏற்படும் நோய்களினால் இறக்கிறார்கள். இன்னும் 30 வருடங்களில் வருடத்திற்கு ஒரு கோடி பேர் இதனால் இறப்பார்கள். 1990 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை புகையிலைத் தயாரிப்புகளால் வருடத்திற்கு 30 லட்சம் பேர் இறந்திருக்கிறார்கள். இனி வரும் வருடங்களில் 70 லட்சம் பேராக இது உயரும் எனவும் அமெரிக்கா, கனடா, டென்மார்க், பிரிட்டன் ஆகிய நாடுகளில்தான் பெண்கள் அதிகமாக இவ்வகையான நோய்களால் உயிரை இழக்கிறார்கள் எனவும் கூறப்படுகிறது.**



**★ 25 கோடி ஆண்டுகளுக்கு முன் உலகில் சக்தி வாய்ந்த மிகப்பெரிய எரிமலை ஒன்று வெடித்திருக்கிறது. இது 1815 ஆம் ஆண்டு தம்போராவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு போல முப்பதாயிரம் மடங்கு அதிகமானதாகும். இதனால், டைனோசர் போன்ற உயிரினங்கள் அழிந்து போயின. கடல் கொதித்து நீரிலிருந்த ஒக்ஸிஜனை அகற்றியதால் அனைத்துக் கடல் உயிரினங்களும் அழிந்தன. இந்த எரிமலை வெடிப்பின் விளைவு ஒரு மில்லியன் ஆண்டுகள் வரை நீடித்தது. நான்கு கால் விலங்குகளில் உருவில் சிறிய பாலூட்டி இனங்களே இதில் மிஞ்சியாகின.**

# நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்



*நேதாஜி (தலைவர்) எனப் போற்றப்படும் சுபாஷ் சந்தரபோஸ் புகழ்பெற்ற இந்திய தேசத்தலைவர்களுள் ஒருவர். அவர் காந்திஜி மேற்கொண்ட அமைதிப் பேராட்ட முறைகளில் திருப்தியடையவில்லை. அவர் 1927 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து பணியாற்றினார். நேதாஜி இளைஞர்களும் பொது மக்களும் தேசிய உணர்வு பெறக்காரணமாக இருந்தார். ஏராளமான இந்திய இளைஞர்களை தேசிய இயக்கத்தில் பங்கு பெற வைத்தார். அவர் பல நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்தியா மீது அந்நாடுகள் அனுதாபம் கொள்ள வழிவகுத்தார். அவர் சிறிது காலம் ஆங்கிலேயரால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். அப்போது அங்கிருந்து ஆப்கானியர் போல் வேடமிட்டு இந்தியாவிலிருந்து தப்பிச் சென்று ஜேர்மனியை அடைந்தார். ஜேர்மனியின் அப்போதைய தலைவர் ஹிட்லரைச் சந்தித்து இந்தியாவிற்கு அவரது உதவியைக் கோரினார். பின் ஜப்பான் சென்று அந்நாட்டுப் பிரதமரைச் சந்தித்தார்.*

*பின்னர் 1924 இல் பர்மா சென்றார். அச்சமயம் பர்மா ஜப்பானியர் வசமிருந்தது. ஜப்பானியர் ஆங்கிலேயரிடம் பணிபுரிந்த பெருமளவிலான இந்தியர்களை கைது செய்து சிறைக்கைதிகளாக வைத்திருந்தனர். அவர்களின் விடுதலைக்கு நேதாஜி ஏற்பாடு செய்தார். பின்னர் அவர்களைக் கொண்டு இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கினார். பின் 1943 இல் சிங்கப்பூர் சென்றார். இந்திய தேசிய இராணுவத்தின் தளபதியாகப் பொறுப்பேற்ற பின் சுபாஷ் சந்திரபோஸ் 'நேதாஜி' (தலைவர்) என எல்லோராலும் அழைக்கப்பட்டார். இவர் பெண்களுக்கான பிரிவையும் அமைத்தார்.*

*இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் சரணடைந்ததால் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் பலர் பிரித்தானியரால் கைது செய்யப்பட்டனர். இதன் காரணமாக நேதாஜி ஜப்பானுக்குத் தப்பிச் செல்லும் வழியில் விமான விபத்தில் உயிரிழந்தார்.*

*இந்தியாவை விடுவிக்க நேதாஜி கண்ட கனவு பிற்காலத்தில் நிறைவேறியது. இந்திய மக்களிடையே ஆழ்ந்த தேச பக்தியை அவரது வீரச்செயல் வளர்த்தது மட்டுமல்லாமல் தேசிய உணர்வுகளையும் தட்டியெழுப்பியது.*

எஸ்.எம்.எம்.ஹரீஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உடத்தலவின்ன English Academy கல்வி நிலைய மாணவர்களின் ஓவியக் கண்காட்சி அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்களையும் ஓவியங்களை வரையும் மாணவர்கள் சிலரையும் படங்களில் காணலாம். *(படமும் தகவலும்: தலவின்னை எஸ்.ஐ.எம்.நளீம்)*



கடுகன்னாவ, குருக்குத்தலையைச் சேர்ந்த அப்துல் அஸீஸ் - தாஜுன்னிஸா தம்பதியரின் அன்புப் புதல்வி பாத்திமா அகீலா, தனது ஒன்பதாவது பிறந்தநாளை 02.01.2009 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை இறைவன் அருளால் நலமாக வாழ குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 2399
ஜெ.சஜீவன், தரம் - 9, தமிழ் ம.ம.வித்., வவுனியா.


அங்.இல : 2400
ஐ.சப்ராஸ், தரம் - 10, அல்-அக்ஸா கல்., கிண்ணியா.


அங்.இல : 2401
டோனஸ் கியூரியன், தரம் - 7, ஹைலண்ட்ஸ் ம.கல்., ஹட்டன்.


அங்.இல : 2402
எஃப்.சமீரா, தரம் - 6, அல்-மா.மு.ம.வித்., இரத்தினபுரி.


அங்.இல : 2403
டி.மனோஜ், தரம் - 5, பாக்கியம் தே.கல்., மாத்தளை.


அங்.இல : 2404
எஃப்.ஷமீமா, தரம் - 9, மு.ம.கல்., கொட்டம்பபிடிய.


அங்.இல : 2405
லோ.யொஹாணி, தரம் - 7, த.ம.வித்., கொட்டகலை.


அங்.இல : 2406
எம்.நளீம், தரம் - 11, ம.ம.வித்., உடுதெனிய.


அங்.இல : 2407
என்.நிம்சாத், தரம் - 8, அல்-ஹிறா வித்., காத்தான்குடி.


அங்.இல : 2408
சிவந்தாமேனுகா, தரம் - 8, புனித அந்தோனியார் ம.வித்., கொழும்பு-13.


அங்.இல : 2409
பா.கஜானந்தசர்மா, தரம் - 8, இந்து ம.கல்., புத்தளம்.


அங்.இல : 2410
ப.சந்திரகணேஸ், தரம் - 13, திருநாவுக்கரசு ம.வித்., யாழ்ப்பாணம்.


அங்.இல : 2411
பி.திவாகரன், தரம் - 7B, புனித சவேரியார் ம.வித்., திருகோணமலை.


அங்.இல : 2412
த.தர்ஷனாத், தரம் - 8, களுதாவளை ம.வித்., மட்டக்களப்பு.


அங்.இல : 2413
எஃப்.நதா, தரம் - 6, அல்-அஸ்ரப் ம.வித்., இறக்காமம்.


அங்.இல : 2414
எம்.இம்றூஸ், உயர்தரம், அல்-ஹம்றா ம.வித்., ஒலுவில்.


அங்.இல : 2415
வே.நர்மதா, தரம் - 8, கவரவில த.ம.வித்., சாமிமலை.


அங்.இல : 2416
தி.மஞ்சு, உயர்தரம், ம.ம.வித்., தம்பிலுவில்.


அங்.இல : 2417
ஜி.சிவச்சந்திரன், உயர்தரம், பாரதி த.வித்., கோணகலை.


அங்.இல : 2418
எம்.இர்பான், தரம் - 11, தே.பா., தெகுணகொல்ல.





ஆஃப்ரின் ஷஹ்னா, தரம் - 9, பாத்திமா மகளிர் ம.வித்., புத்தளம்.



எஸ்.சிவப்பிரியதர்ஷனி, தரம் - 6, பது/பாதினாவெல முஸ்லிம் வித்., பொறகஸ்.


எம்.என்.எம்.ஆதில், தரம் - 6, திப்பிடிய மு.ம.வித்., அறனாயக.


எம்.ஆர்.எஃப்.ரைஹானா, தரம் - 2, க/ஜப்பார் மத்திய கல்., கலகெதர.


க.ஷேன், தரம் - 4, ஜோசப் வாஸ் வித்தியாலயம், மட்டக்களப்பு.


எம்.சபானா, தரம் - 7, ஜமாலியா முஸ்லிம் ம.வித்., திருகோணமலை.


எம்.ஆர்.எம்.ரினாஸ், தரம் - 11, ஜப்பார் மத்திய கல்., கலகெதர.


சுந்தரலிங்கம் அனுஷிகா, தரம் - 7, கொ/சைவ மங்கையர் வித்., கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாமிக்கும் மகளுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

නැන්දා: මලර්, අම්මා කෝ?
மலர், அம்மா கோ?
மாமி: மலர், அம்மா எங்கே?



දැන් අම්මාට කොහොමද?
தென் அம்மாட கொஹொமத?
இப்போது அம்மாவுக்கு எப்படி?

දුව: අම්මා ඇතුළේ ඉන්නවා නැන්දේ.
அம்மா எதுளே இன்னவா நெந்தே.
மகள்: அம்மா உள்ளே இருக்கிறார் மாமி.

දැන් අම්මාට ටිකක් සනීපයි.
தென் அம்மாட டிகக் சனீபய்.
இப்போது அம்மாவுக்குக் கொஞ்சம் சுகம்.

නැන්දා: තාත්තා වැඩට ගියාද?
தாத்தா வெட்ட கியாத?
மாமி: அப்பா வேலைக்குப் போனாரா?

දුව: තාත්තා දැනුයි ලෑස්ති වෙන්නේ.
தாத்தா தெனுய் லேஸ்தி வென்னே.
மகள்: அப்பா இப்பதான் ஆயத்தமாகிறார்.



අයියා දැන් තමයි ගියේ.
அய்யா தென் தமய் கியே.
அண்ணா இப்பதான் போனார்.

නැන්දා: නංගි පාසලට ගියාද?
நங்கி பாசலட கியாத?
மாமி: தங்கச்சி பாடசாலைக்குப் போனாளா?

දුව: නැහැ, නංගි කෑම කනවා.
நெஹெ, நங்கி கேம கணவா.
மகள்: இல்லை, தங்கச்சி சாப்பிடுகிறாள்.

නැන්දා: ඔයාලා ඔක්කොම ගියාම අම්මා තනියම නේද?
ஒயாலா ஒக்கொம கியாம அம்மா தனியம நேத?
மாமி: நீங்கள் எல்லோரும் போனால் அம்மா தனிமையில்தானே?

දුව: නැහැ නැන්දේ, නෑනා ඇවිත් බලා ගනීවි,
நெஹே நெந்தே, நேனா எவித் பளாகனீவி.
மகள்: இல்லை மாமி, அண்ணி வந்து பார்த்துக்கொள்வார்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: மலர், அம்மா எங்கே?
මලර්, අම්මා කෝ?

i. அம்மா உள்ளே இருக்கிறார்.
..............................................................................

ii. அப்பா வேலைக்குப் போனார்.
..............................................................................

iii. தங்கச்சி பாடசாலைக்குப் போனாளா?
..............................................................................

iv. தங்கச்சி சாப்பிடுகிறாள்.
..............................................................................






**'Are'** எனும் துணை வினைச்சொல், நிகழ்கால துணை வினைச்சொல் (Present Tense Auxiliary Verb) என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இதன் இறந்தகால வடிவம் 'were' என்பதாகும். இவற்றை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) You are.
நீ இருக்கின்றாய். (நிகழ்காலம்)

(ஆ) You were.
நீ இருந்தாய். (இறந்தகாலம்)

(அ) You are in the class.
நீ வகுப்பில் இருக்கின்றாய். (நிகழ்காலம்)

(ஆ) You were in the class.
நீ வகுப்பில் இருந்தாய். (இறந்தகாலம்)

(அ) You all are in the class now.
நீங்கள் அனைவரும் இப்பொழுது வகுப்பில் இருக்கின்றீர்கள்.

(ஆ) You all were in the class yesterday.
நீங்கள் அனைவரும் நேற்று வகுப்பில் இருந்தீர்கள்.

---

(அ) We are.
நாங்கள் இருக்கின்றோம். (நிகழ்காலம்)

(ஆ) We were.
நாங்கள் இருந்தோம். (இறந்தகாலம்)

(அ) We are at home now.
நாங்கள் இப்பொழுது வீட்டில் இருக்கின்றோம்.

(ஆ) We were in the garden yesterday.
நாங்கள் நேற்று தோட்டத்தில் இருந்தோம்.

---

(அ) They are.
அவர்கள் இருக்கின்றார்கள். (நிகழ்காலம்)

(ஆ) They were.
அவர்கள் இருந்தார்கள். (இறந்தகாலம்)

(அ) They are in the office now.
அவர்கள் இப்பொழுது அலுவலகத்தில் இருக்கின்றார்கள்.

(ஆ) They were in the office yesterday.
அவர்கள் நேற்று அலுவலகத்தில் இருந்தார்கள்.

---

(அ) The children are.
அந்தப் பிள்ளைகள் இருக்கின்றார்கள். (நிகழ்காலம்)

(ஆ) The children were.
அந்தப் பிள்ளைகள் இருந்தார்கள். (இறந்தகாலம்)

(அ) The children are in school now.
அந்தப் பிள்ளைகள் இப்பொழுது பாடசாலையில் இருக்கின்றார்கள்.

(ஆ) The children were in school yesterday.
அந்தப் பிள்ளைகள் நேற்று பாடசாலையில் இருந்தார்கள்.

(அ) The boys are in the class now.
அந்த ஆண் பிள்ளைகள் இப்பொழுது வகுப்பில் இருக்கின்றார்கள்.

(ஆ) The boys were in the class yesterday.
அந்த ஆண் பிள்ளைகள் நேற்று வகுப்பில் இருந்தார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# சீனாவில் மீண்டும் பறவைக்காய்ச்சல்



சீனாவில் மீண்டும் ஏற்பட்டுள்ள பறவைக் காய்ச்சலினால் 25 வயதுடைய பெண்ணொருவர் மரணமாகி இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறே, இரண்டு வாரங்களுக்கு முன்னர் பீஜிங் நகரில் 19 வயதுடைய யுவதியொருவரும் பறவைக் காய்ச்சலினால் மரணமாகியிருந்தார். இதன்படி, இந்த வருடத்தில் சீனாவில் பறவைக் காய்ச்சலினால் இரண்டு பேர் மரணமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பறவைக் காய்ச்சல் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருந்த நிலையில், இவ்வாறு மீண்டும் அந்த நோய் தலைதூக்கியுள்ளமை அதிகாரிகளை அச்சமடைய வைத்துள்ளது. ஆரம்பத்திலேயே அதனைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.



## காஸா பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்



பலஸ்தீனத்தில் 'ஹமாஸ்' அமைப்பிற்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வந்த தாக்குதல்கள் முடிவிற்கு வந்துள்ளமையினால், காஸா பகுதியில் மூடப்பட்டிருந்த ஐ.நா சபையின் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக அகதிகளாக்கப்பட்டவர்கள் மேற்படி பாடசாலைகளிலேயே தங்கியிருந்தனர். அதனால், பாடசாலையை நடத்தமுடியாத நிலை இருந்தது. எனினும், தற்போது போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளமையால் அகதிகள் தமது இருப்பிடங்களை நோக்கித் திரும்பிச் செல்கின்றமையால், குறித்த ஐ.நா பாடசாலைகளை மீண்டும் நடத்தக்கூடிய சூழ்நிலை தோன்றியிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

இதேவேளை, தாக்குதல் சம்பவத்தின் காரணமாக அதிர்ச்சிக்கு உள்ளாகிய பிள்ளைகளுக்கு மனநல சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஸ்பெயினில் சூறாவளி; பதினைந்து பேர் மரணம்



ஸ்பெயின் நாட்டில் ஏற்பட்ட கடும் மழை, சூறாவளியின் காரணமாக பதினைந்து பேர் மரணமாகியதுடன், ஏராளமானோர் நிர்க்கதி நிலைக்கு ஆளாகினர்.



இந்த சூறாவளியின் தாக்கம் பிரான்ஸ் நாட்டின் தென்மேற்குப் பகுதியையும் பாதித்ததில் அப்பகுதியில் மின்சாரத் தடையும் ஏற்பட்டது. இதனால், லட்சக்கணக்கான மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். அத்தோடு, போக்குவரத்திலும் பாதிப்புக்கள் நேர்ந்தன.

இதேவேளை, விளையாட்டரங்கொன்றின் கூரை இடிந்து விழுந்ததில் நான்கு சிறுவர்கள் மரணமாகியதுடன் போட்டியொன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த இளைஞர்கள் சிலரும் காயங்களுக்கு உள்ளாகினர். 'பேஸ் போள்' என்ற விளையாட்டில் கலந்து கொள்வதற்காகவே இந்த இளைஞர்கள் குறித்த விளையாட்டரங்கிற்கு வந்திருந்தனர். அவ்வேளை, வீசிய சூறாவளியின் காரணமாகவே பார்வையாளர் அரங்கில் மேற்படி அனர்த்தம் நேர்ந்துள்ளது. இன்னும் ஏராளமானோர், பாரிய மரங்கள் பல சரிந்தமையால் காயங்களுக்கு உள்ளாகியமையும் குறிப்பிடத்தக்கது.

## நேபாளப் பிரதமரின் திடீர் அறிவிப்பு



நேபாளப் பிரதமர் பிரசன்டா சீதனம் வாங்கும் முறையினைத் தடை செய்துள்ளார். நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியின் ஊடாக உரையாற்றிய பிரதமர் பிரசன்டா, மக்களிடையே தனது அரசாங்கம் செல்வாக்கு இழந்திருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சகலரையும் ஒன்றுபடுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த வருடம் நேபாளத்தில் மன்னர் ஆட்சி நீக்கப்பட்டு அரச சபையொன்றை ஏற்படுத்தி அதன்மூலம் ஆட்சி அதிகாரத்தை நடத்தி வருகின்றார் பிரசன்டா. என்றாலும், மக்கள் மத்தியில் அவரது ஆட்சி குறித்து அதிருப்தியான கருத்துக்களே நிலவி வருகின்றன.

இத்தகைய நிலையில் தனது அரசியல் இருப்பை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் பொருட்டு மக்கள் மத்தியில் அபிமானத்தை அடைவதற்காகவே அவர் இவ்வாறு திருமணம் செய்வோர் சீதனம் வாங்கும் நடைமுறைக்கு தடை விதித்துள்ளார் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

**அற்லஸ் கேள்வி - 189**

**கேள்வி:** சீதனம் வாங்கும் முறையினை தடைசெய்துள்ள பிரதமரின் பெயர் என்ன?

சரியான விடை.......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 188,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 187 இன் சரியான விடை: 2011 ஆம் ஆண்டில்**

பரிசு பெறுவோர்

ஆன் டிலுக்ஷி,
82, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13.

மோ.ஹனுசியா,
314, மாரிமுத்து செட்டியார் மாவத்தை,
மாத்தளை.

மனோகரன் பிரியங்கா,
28, றைகம் ஜனபதய, மாங்கிரிய, இங்கிரிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில்மிகு ரம்பா விகாரை

**புத்தரின் புனித தந்தம் வைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படும் 'ருஹுசனுபுரவரய' என்றழைக்கப்படும் தெற்கின் 'ரம்பா' விகாரை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு தலமாகும். பௌத்தத்தின் வளர்ச்சிக்கு இந்த விகாரை முக்கிய பங்காற்றியதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.**

கி.பி 1017 ஆம் ஆண்டளவில் முதலாவது இராஜேந்திர சோழ மன்னன் இலங்கை மீது படையெடுத்தான். அப்போது அநுராதபுரத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த 5 ஆவது மஹிந்த மன்னனைத் தோற்கடித்து இலங்கையை தென் இந்திய சோழர் ஆட்சியின் குடியேற்ற நாடாக்கினான்.

உறுகுணையைத் தளமாகக் கொண்டு மீண்டும் சோழர் படையெடுப்பு முறியடிக்கப்பட்டு இலங்கை மீட்டெடுக்கப்பட்டதில் கீர்த்தி மன்னனுக்கு தனிச்சிறப்புண்டு. இவர் படைபலத்தை





மகாநாகுல என்ற இடத்தை மையமாகக் கொண்டு தயார்படுத்தியே இந்தப் படையெடுப்பை மேற்கொண்டார். அந்த இடத்தில்தான் இன்றைய ரம்பா விகாரை அமைந்திருக்கின்றது.

மாத்தறை-அம்பாந்தோட்டை பிரதான வீதியில் 'நோனாகம' சந்தியால் திரும்பி இரத்தினபுரி நோக்கி பயணிக்கும்போது 'வலவ' கங்கைக்கரையில் வரலாற்றுப் புகழ்மிகு இந்த விகாரை அமைந்திருக்கின்றது. சோழர் படையெடுப்பை முறியடித்த இடமாகக் கருதப்படும் இந்த இடத்தில் அதன் நினைவாக கீர்த்திஸ்ரீ மன்னர் இந்தப் பௌத்த தாகபையை நிர்மாணித்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.



விஜயபாகு மன்னரின் பின்னர் இலங்கையில் அரசியல் மறுமலர்ச்சி ஏற்பட்டதாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. அதிகாரப் போட்டி காரணமாக உள்நாட்டிலும் குறுநில மன்னர்கள் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்து வந்தனர். இறுதியில் மகாபராக்கிரமபாகு மன்னரால் தோற்கடிக்கப்பட்டு நாடு ஒருமுகப்படுத்தப்படும்வரை இந்நிலை தொடர்ந்தது.

இப்பகுதியில் மனாமுழுவபுர என்ற இடத்தில் சுகனா என்ற பெண் குறுநில அரசி ஒருவரும் இங்கு ஆட்சி செய்ததாக வரலாறு கூறுகின்றது. இந்த அரசியின் காலத்தில்தான் புத்தரின் புனித தந்தம் மனாமுலுவ புரவில் வைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. பின்னர் மகா பராக்கிரமபாகுவால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு காரணமாக உறுகுணையில் இத்தகைய சிறப்பிடம் அழிக்கப்பட்டதாகவும் குறிப்புக்கள் உள்ளன.

## மனாமுழுவ பிரகடனம்

10 ஆம் 12 ஆம் நூற்றாண்டுகளில் மத, கலாசார மத்திய நிலையமாக இந்த ரம்பா தாகபை மிளிர்ந்திருக்கின்றது. 'மனாமுழுவ பிரகடனம்' என்றழைக்கப்படும் பிரகடனம் ஒன்று இந்த விகாரையில் வைத்தே எழுதப்பட்டிருக்கின்றது. அதனை எழுதியதாகக் கூறப்படும் நாகசேன தேரர் இந்த ரம்பா விகாரையிலேயே தங்கியிருந்துள்ளார்.

அந்தப் பிரகடனத்தில் இலங்கையில் அப்போது ஆட்சி செய்த மன்னரின் அரச சபை அமைச்சரான ஞான என்ற அமைச்சர் பர்மா தேசத்தில் இருந்து இங்கு அனுப்பப்பட்ட பிரகடனம் (ஓலைக்கடிதம்) ஒன்றுக்கு பதில் எழுதுவதாகவே அமைந்திருந்தது.

பௌத்தம் மற்றும் கலை கலாசார உறவுப் பரிமாற்றம் தொடர்பாக பர்மாவின் அரிமத்தான என்ற நகரத்திற்கும் உறுகுணைக்கும் இடையில் இருந்த சர்வதேச தொடர்பை இந்த சாசனம் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. பொலன்னறுவைக் காலத்திலும்கூட இந்த உறுகுணை ரம்பா விகாரை பிரபலம் வாய்ந்த மத-கலாசார கேந்திர நிலையமாக இருந்து வந்திருக்கின்றது.

## பௌத்த ஆராமய தொகுதி

'ஆராமயா' என்று சிங்கள மொழியில் அழைக்கப்படுவது பௌத்த விகாரைகளில் உள்ள ஒன்று கூடல் மற்றும் சந்திப்புக்களை நடத்தும் கட்டடத் தொகுதியாகும். இந்த ரம்பா விகாரையிலும் அத்தகைய கட்டடத்தொகுதிகள் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இன்றும்கூட அதற்கான கழிவுகளின் எச்சசொச்சங்களைக் காணமுடிகின்றது. அரச மாளிகைகளின் இடிபாடுகளும் உள்ளன. இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் எச்.டபிள்யூ.கொட்ரிங்டன் என்பவர் இதுபற்றி குறிப்பிட்டுள்ளார்.

தொல்பொருளியல் ஆராய்ச்சி நிறுவனம் இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிகு ரம்பா விகாரையை பாதுகாத்து அதன் வரலாற்றுச் சிறப்புக்களை வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது.


அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த ஆய்வுகளின்படி உறுகுணை குறுநில மன்னர்களின் ஆட்சி மற்றும் சோழர் படையெடுப்புக்கள் போன்றவற்றுக்கு சான்று கூறும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அநுராதபுர காலத்தின் கட்டடக்கலை மற்றும் கலைநுட்பங்களை இங்கு அவதானிக்க முடிகின்றது. அத்தோடு,பர்மா, ஆப்கானிஸ்தான் பகுதிகளிலும் காணப்படுகின்ற பௌத்த கட்டடக்கலைக்கு ஒப்பான வடிவங்களின் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், பாடசாலைகளில் வரலாற்றுப் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் அறிவுக்குத் தேவைப்படும் இந்நாட்டின் பௌத்தத்தின் எழுச்சி, மன்னர் கலை நிர்வாகச் சிறப்புக்கள், படையெடுப்புக்கள் பற்றிய தகவல்களுக்கு இத்தகைய பௌத்த விகாரைகளை மையமாகக் கொண்ட தகவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**அமீர் ஹுசைன்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரிவாயனின் வித்தியாசமான சிரிப்பு



அந்தப் பாழடைந்த வீட்டுப்பக்கம் இருந்து 'விர்' என்று ஏதோ ஒன்று வந்து அவர்கள் மீது விழவும் அதைத் தொடர்ந்து 'ஹெஹ்ஹெஹ்ஹே' என்னும் அந்த வித்தியாசமான சிரிப்புச் சத்தம் கேட்கவும் பயந்து நடுங்கிய விமல் காவல்காரரின் கைகளை இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டதும் காவல்காரர் அவனை விசித்திரமாகப் பார்த்தார்.

''என்ன தம்பி, பேயைப் பார்ப்பதற்கு துணிச்சலாக வந்தீர்கள். இப்போது இப்படிப் பயந்து நடுங்குகிறீர்களே உங்களுக்கு வெட்கமாக இல்லையா?''

விமலுக்கு எதுவும் புரியவில்லை. உடல் இன்னும் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தது. அவனுக்கு காவல்காரரைப் பார்க்கையில் இனந்தெரியாத பயமொன்று ஏற்பட்டது. அவருடன் பேசுவதற்கும் பயமாக இருந்தது.

''நாம் முன்பு நினைத்தது போல் இவருக்குள் ஒரு பேய்

## பேயைப் பார்த்துவிட்டு சர்வசாதாரணமாக நிற்கிறாரே. அப்படியானால் இவருக்குள் ஒரு பேய் இருக்கிறதா? என்று சிந்திக்கலானான் விமல்

இருக்கிறதோ? அந்தப் பக்கம் உள்ள பேயைப் பார்த்துக் கொண்டு சர்வசாதாரணமாக இருக்கிறாரே'' என்று பலவாறு நினைத்தவன் பேசாமல் ஓடிப் போய்விடலாமா என்று நினைத்தான். அவனுடைய நிலைமை அவருக்குப் புரிந்துவிட்டதோ என்னவோ அவர் அவனை




இறுக்கிப் பிடித்துக் கொண்டார்.

உடனே விமல், ''ஐயோ! அம்மா'' என்று அலறினான். ஆனாலும்,அவனின் தொண்டை அடைத்துக் கொண்டது. சத்தம் வெளியில் வர மறுத்தது. காவல்காரருக்கு கோபம் கோபமாக வந்தது.

''ச்சே! நீங்கள் என்ன மனிதரோ தெரியவில்லை. இப்படிப் பயந்து சாகின்றீர்களே. இப்படித் தினமும் செத்துச் செத்துப் பிழைப்பதை விட ஒரேயடியாகச் செத்து விடலாம்'' என்று கூறினார்.

பின்னர் டோர்ச் வெளிச்சத்தை அந்தப் பக்கம் பாய்ச்சி ''அதோ பாருங்கள் தம்பி'' என்றார்.

அங்கே.......

அந்தக் கரிய உருவம் பற்களை நறநறவென்று கடித்தபடி அவர்களையே பார்த்துக்கொண்டு இருந்தது. காவல்காரர் அந்த உருவத்தைப் பார்த்துப் பேசினார்.

''கரிவாயா! நீ செய்த வேலையைப் பார். இந்தத் தம்பி உன்னைப் பார்த்துப் பயந்து நடுங்குகிறார்'' என்றார்.

''ஏன், நான் என்ன செய்தேன்?'' என்று அந்த உருவம் கேட்டது. அதைக் கேட்டதும் விமலுக்கு ஓரளவுக்கு தைரியம் ஏற்பட்டு விட்டது. அங்கு என்ன நடக்கிறது என்று கவனித்துக் கொண்டு இருந்தான். காவல்காரர் அவனிடம் சொன்னார்.

''தம்பி விமல், பயப்படாதீர்கள். அவரும் நம்மைப் போல மனிதர்தான்'' என்றார்.

''நீங்கள்தானே, பேயைப் பார்க்கலாம் என்று என்னைக் கூட்டிக்கொண்டு வந்தீர்கள்'' என்று விமல் கூறினான்.

''ஆமாம், உங்கள் பயத்தைப் போக்க வேண்டும் என்றுதான் அப்படிக் கூறினேன்''

''கரிவாயன் என்று கூறினீர்களே பெயர் ஏன் அப்படி இருக்கிறது?''

''அதற்கு என்ன செய்வது? அதுதான் அவர் பெயர். அவர் கறுப்பாகப் பிறந்ததால் அவருடைய பெற்றோர் அவருக்கு தங்கள் குலதெய்வமான 'கரிவாயன்' என்னும் பெயரை வைத்துள்ளார்கள்''

''அவருடைய சிரிப்புக் கூட வித்தியாசமாக இருக்கிறதே? பல்லை வேறு நறநறவென்று கடித்தாரே?''

''அதற்கு நான் என்ன செய்யமுடியும்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சிரிக்கிறார்கள். அவர் சிரிக்கும் விதம் அது. காவல்காரர் இப்படிப் பலவிதமாக விளக்கமளித்ததும் விமல் கேட்டான்.

''அதுசரி, அவர் ஏன் பல்லைக் கடித்துக் கொண்டு என்னை அடிக்கக் கையை ஓங்கினார்?''

விமல் இப்படிக் கேட்டதும் கரிவாயன் என்னும் அந்த மனிதர் மீண்டும் ஹெஹ்ஹெஹ்ஹே என்று சிரித்தார். பின்னர் அவர் சொன்னார் ''நான் ஏன் தம்பி உங்களை அடிக்க வரவேண்டும்? எனக்கென்ன பைத்தியமா?''

''அன்று நீங்கள் என்னை அடிக்கக் கை ஓங்குவதைப் பார்த்துத்தான் பயந்து ஓடினேன்'' என்று விமல் கூறினான்.

அதற்கு கரிவாயன் கூறினார், ''தம்பி.. அன்று நீங்கள் 'டோர்ச்' வெளிச்சத்தை அடித்தபோது நீங்கள் இருட்டில் இருந்ததால் உங்களை காவல்காரர் என்று நினைத்துவிட்டேன். வழக்கமாக நான் மூன்று மணியளவில் எழுந்து புறப்படுவேன். காவல்காரர் ரவுண்ட்ஸ் வரும்போது நான் இருக்கிறேனா என்று பார்ப்பதற்காக இந்தப் பக்கம் டோர்ச் வெளிச்சத்தை அடிப்பார். நானும் பதிலுக்கு எதையாவது எடுத்து அவர் பக்கம் வீசிவிட்டுச் சிரிப்பேன். அதன்பின்னர் இரண்டு பேரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்போம். இது வழக்கமாக நடப்பதுதான். அன்றும் அப்படித்தான் காவல்காரர் என்று நினைத்துச் சிரித்தேன். விளையாட்டாக கையை உயர்த்தினேன். நீங்கள் பயந்து ஓடிவிட்டீர்கள்''

கரிவாயன் கூறியதைக் கேட்டு விமல் சிறிதுநேரம் மௌனமாக இருந்தான். பின்னர் கேட்டான். ''சரி, நீங்கள் ஒரு நாளாவது பகல் நேரத்தில் வந்து என்னைக் கண்டிருக்கலாமே?'

''நன்றாகச் சொன்னீர்கள் தம்பி. நான் அந்தப் பக்கம் அதுவும் பகல் நேரத்தில் வருவதா? உங்கள் காவல்காரரிடமே விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்று கரிவாயன் கூறியதும் விமல் காவல்காரரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவர் சொன்னார், ''அது பெரிய கதை தம்பி. நம் முதலாளிக்கும், இந்தக் காணி உரிமையாளருக்கும் இடையில் நீண்டநாள் பகை. கரிவாயன் இந்தக் காணியின் பாதுகாப்புக்காக இங்கு தங்கி இருக்கிறார். இந்தக் காணிக்காரர்கள் அந்தப் பக்கமோ, அந்தக் காணிக்காரர்கள் இந்தப் பக்கமோ வருவது போவது கிடையாது. முதலாளிமாருக்கிடையில்தான் பகைமை. நாங்கள் ஏன் பகைமை பாராட்டவேண்டும். நாங்கள் நட்புடன் இருப்பதால் ஒருவர் இல்லாதபோது மற்றவர் பாதுகாப்புக் கடமையையும் கவனித்துக் கொள்கிறோம். இதெல்லாம் முதலாளிமாருக்கு எங்கே தெரியப்போகிறது. இனிமேலும் நீங்கள் தனியாக காவல் வேலை செய்ய நேரக்கூடும். நீங்கள் தைரியமாக இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் இதையெல்லாம் உங்களுக்குச் சொல்லித் தருகிறேன். என்ன புரிகிறதா?''

காவல்காரர் கேட்டதற்கு விமல் ''புரிகிறது'' என்று கூறினான்.

''சரி நாம் தியேட்டருக்குப் போவோம்'' என்று கூறிய காவல்காரர் கரிவாயனிடம், ''கரிவாயா நாங்கள் வருகிறோம்'' என்று விடைபெற்றுக் கொண்டார்.

''ஏன் தம்பி, இனிமேல் பயப்படமாட்டீர்கள்தானே?''

''பயப்படமாட்டேன். ஆனால், அதற்கு முன் இன்னொரு விஷயத்தைப் பற்றியும் உங்களிடம் தெரிந்து கொள்ளவேண்டும்'' என்று கூறினான். காவல்காரர் அவனை கேள்விக்குறியுடன் நோக்கினார்.

(தொடரும்....)

# கல்வி கற்கும் ஆசை

மன்சூர்பாத் என்ற ஊரில் திலகன் என்ற ஏழை சிறுவன் ஒருவன் வசித்து வந்தான். அவன் அந்த ஊரில் இருந்த செல்வந்தர் நாகலிங்கம் வீட்டில் வேலை செய்து வந்தான். தினமும் ஆடு, மாடுகளை ஓட்டிச் செல்வான். அவற்றை மேய விட்டு விட்டு, அங்குள்ள பெரிய புளிய மரத்தடியில் தினமும் உட்கார்ந்து யோசிப்பான். நானும் பாடசாலைக்குப் போய் படிக்கலாம். ஆனால், எனக்கு எந்த வசதியும் இல்லையே'' என்று கவலைப்படுவான்.

குடிசையில் அவனும்,அவன் அம்மாவும்தான். காலையில் அவன் அம்மாவும் வயல் வேலைக்குப் போய் மாலைதான் வருவார். திலகன் சிறுவனாக இருந்தபோது அவன் அப்பா இறந்துவிட்டார்.

அவனுக்கோ நன்கு படித்து அம்மாவை நன்றாக வைத்துப் பார்க்க ஆசை. ஆனால், மனதிலுள்ள ஆசையை அடக்கிக் கொண்டு ஆடு, மாடு மேய்க்கும் வேலையை ஒழுங்காகச் செய்து வந்தான்.

அன்றும் வழக்கம் போல் ஆடு, மாடுகளை காட்டிற்கு ஓட்டிச் சென்று மேயவிட்டு, விட்டு புளிய மரத்தடிக்கு வந்து வழக்கமாக உட்காரும் இடத்தில் வந்து உட்கார்ந்தான். ''ஆண்டவா படிக்க வேண்டும் என்ற என் ஆசையை எப்படி நீ நிறைவேற்றப் போகிறீர்'' என்று மன முருகி வேண்டினான். காற்றும் கண்களை அசத்த அப்படியே படுத்துத் தூங்கிவிட்டான். எவ்வளவு நேரம் தூங்கினானோ தெரியவில்லை. சூரியன் மலை வாயிலில் இறங்க ஆரம்பிக்க 'என்ன இப்படித் தூங்கிவிட்டோமே' என்று அவசர அவசரமாக எழுந்து ஆடு, மாடுகளை விரட்டி ஒரு பக்கமாக கொண்டு வரும்போதுதான் கறுப்புக்காளையை காணவில்லை என அறிந்தான். உடனே அதைத் தேடிப் பார்ப்பதற்கு சென்றான் திலகன். அப்போது மலைக்கு மறுபக்கம் இருந்த மாடு தீனமாகப் பெரிய குரலில் கத்தும் சத்தம் கேட்டு அங்கு ஒரே ஓட்டமாக ஓடினான்.

அங்கு மாட்டின் ஒரு கால் ஒரு பள்ளத்தில் சிக்கிக் கொண்டதால் மாடு வலியுடன் கத்தியபடியிருந்தது. அதைக் கண்டு துடித்துவிட்டான் திலகன். மாட்டின் காலை பள்ளத்திலிருந்து மெல்ல விடுவித்து காலைத் தடவிக் கொடுத்தான். அதுவும் துள்ளி பள்ளத்தில் இருந்து மேலே ஏற ஆரம்பித்தது. திலகன் மாட்டுடன் வரும் வழியில் புதிதாகத் தோண்டிய மண் போன்ற ஒரு பகுதி விசேஷமாக இருந்தது. அத்துடன், அந்த இடத்தை யாரோ அடையாளம் இட்டிருப்பது தெரிந்து வேகவேகமாக அந்த மண்ணைத்தோண்டினான். அங்கு ஒரு மண் பானை புதைந்திருப்பது தெரிந்து ஆவலுடன் அதை வெளியில் எடுத்து பானையின் மூடியைத் திறந்து பார்த்த திலகன் பயந்துவிட்டான். அதில் சில நகைகளும் ரூபா நோட்டுக் கட்டுகளும் இருந்தன. ''ஐயோ! இது யார் வீட்டில் களவு போனதோ? யார் இங்கு புதைத்து வைத்தார்களோ? தெரியலையே'' என்று சிறிது யோசித்துவிட்டு, ''எதுவானாலும் இதை வீட்டிற்கு எடுத்துப் போய் அம்மாவிடம் கொடுத்துவிடலாம்'' என்று பானையை மூடிப் பத்திரமாக தன் இடுப்புத் துண்டை அவிழ்த்து மூடிக், கையில் எடுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிப்போய் பானையை அம்மாவிடம் கொடுத்து நடந்ததைச் சொன்னான்.

அவன் அம்மாவோ, கட்டுக்கட்டாக பணத்தையும் நகைகளையும் பார்த்துப் பயந்துவிட்டாள். நன்கு உற்றுப் பார்த்தபோது அவை செல்வந்தர் நாகலிங்கம் வீட்டு நகைகள் போல் தெரிந்தது. உடனே அவர் வீட்டிற்கு இருவரும் ஓடினார்கள். நகைகள் திருட்டு போய் திருடனைப் பிடிக்கவேண்டும் என்பதற்காக நாலாபுறமும் ஆட்களை அனுப்பிக் கொண்டிருந்தார் நாகலிங்கம். புதையல் பானையையும் அதில் உள்ள நகைகளையும் கண்டதும், ''இது எப்படி உனக்குக் கிடைத்தது?'' என்றார். விபரத்தைச் சொன்னான் திலகன். அவனை கட்டித் தழுவி முத்தமிட்ட நாகலிங்கம், ''இனி நீ என் வளர்ப்பு மகன். உனக்கு என்னடா ஆசை'' என்றார்.



''நான் படிக்கணும் ஐயா!'' என்றான். ''நாளைக்கே உன்னைப் பாடசாலையில் சேர்க்கிறேன். உன் அம்மா நம் வீட்டில் இருந்து வேலை செய்யட்டும்.'' என்றார். திலகன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நேர்மையாய் இருந்தால் நாம் நினைத்தவை நடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அர்ஜுன அதிருப்தி!

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான அர்ஜுன ரணதுங்க, இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்காலத்தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளமையால், விளையாட்டுத்துறை அமைச்சருக்கும் ரணதுங்கவிற்குமிடையே இழுபறி நிலையை தோற்றுவித்துள்ளதாக கருதப்படுகின்றது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாகவே அர்ஜுன ரணதுங்க தனது பதவி நீக்கத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்திருந்தார்.

கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளில் விளையாட்டுத்துறை அமைச்சர் தலையீடு செய்கிறார் என்ற ஆதங்கத்தில் அர்ஜுன ரணதுங்க இருந்து வந்துள்ளார்.

அதேவேளை, தன்னிடம் ஆலோசிக்காமல் தன்னிச்சையாக 16 பணியாளர்களை அர்ஜுன ரணதுங்க பணிநீக்கம் செய்துள்ளார் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் குறைப்பட்டுள்ளார்.

எனினும், தனது பதவி நீக்கத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு செல்வதாக கூறியுள்ள ரணதுங்க, தனக்கு இழப்பீடாக ஒன்றரைக் கோடி ரூபாவை கோரவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பங்களாதேஷ் அணியில் பிரகாசிக்கும் இளம் வீரர்





பங்களாதேஷில் அண்மையில் நடைபெற்ற முக்கோண கிரிக்கெட் போட்டிகளில் பங்களாதேஷ் அணியின் சார்பில் விளையாடிய சக்ப் அல்ஹசன் என்ற இளம் வீரர் சகலதுறையிலும் சிறந்து விளங்கியதுடன், கிரிக்கெட் உலகை தன்னை நோக்கிப் பார்வையிடச் செய்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி சிம்பாப்வே அணியுடனான ஒருநாள் போட்டியில் முதன்முதலாக சர்வதேச போட்டியில் களம் இறங்கிய இவருக்கு வயது 21. ஆரம்ப காலங்களில் இவர் சரிவரப் பிரகாசிக்காத போதிலும் 2008 ஆம் ஆண்டின் முன்பாதியிலிருந்து இன்றுவரை அவர் பிரகாசித்தே வந்துள்ளார்.

குறிப்பாக 2008 ஆம் ஆண்டில் துடுப்பாட்டத்தில் சிறப்பாகத் தனது திறமையை சக்ப் அல்ஹசன் வெளிப்படுத்தி வந்துள்ளார். அதிலும் இலங்கைக்கு எதிரான போட்டியில் பலமுறை இவர் தனது பிரகாசிப்பை வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

'கெராமின் ஃபோன்' கிண்ண டெஸ்ட் போட்டியின்போது இவர் 92 ஓட்டங்களைப் பெற்றிருந்ததுடன், இப்போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றியை நெருங்கி வந்த நிலையில் சக்ப் அல்ஹசன் ஆட்டமிழந்தார். இதனால், வெற்றி வாய்ப்பு கைநழுவிப் போனமை நினைவுகூரத்தக்கது. இருப்பினும், முக்கோண ஒருநாள் போட்டியின்போது, சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அல்ஹசன் ஆட்டமிழக்காமல் 92 ஓட்டங்களைப் பெற்று மூன்றாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றியீட்டுவதற்கு வழியை ஏற்படுத்தினார். இந்த ஓட்டங்களைப் பெறுவதற்கு இவர் 10 பவுண்டரிகளையும், 2 சிக்ஸர்களையும் விளாஸி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இத்தனை திறமைமிகு வீரர்கள் பங்களாதேஷ் போன்ற பின்தங்கிய நிலையில் உள்ள அணிகளில் இடம் பெறுகின்றமை ஏனைய முன்னிலை அணிகளுக்கு நல்லதொரு சவாலை ஏற்படுத்தி இருப்பதுடன் எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பங்களாதேஷ் அணி நம்பிக்கையுடன் போட்டியிடக்கூடிய நிலையை தோற்றுவித்திருப்பதாகவும் கருதப்படுகின்றது.

## யாழ்.மாவட்டத்தில் விளையாட்டு விழா

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடமாகாணத்தின் யாழ். மாவட்டத்தில் மிகப்பெரிய விளையாட்டு விழாவொன்று நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் இக்கால விளையாட்டுக்களும் உள்ளடங்கும் விதமாக மேற்படி விளையாட்டுப்போட்டிகளை நடத்துவதற்கு சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஆடவருக்கான கால்பந்தாட்டம், மகளிருக்கான வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், ஹொக்கி, மரதன் ஓட்டப் போட்டி, மாட்டு வண்டியோட்டம், கயிறு இழுத்தல் என பல்வேறு போட்டிகளும் மேற்படி விழாவின் போது இடம்பெறும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர்களும் இந்த போட்டிகளில் கலந்து கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் அணியின் தலைவராக யூனுஸ்கான்

## முகாமையாளர் மியாட்டாட் பதவி விலகல்





பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்த சொயிப் மலிக் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டு புதிய தலைவராக யூனுஸ்கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியுடன் நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரில் 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி தோல்வி அடைந்தமையாலும், இறுதிப் போட்டியின்போது 75 ஓட்டங்களை மாத்திரமே பெற்றமையை கருத்தில் கொண்டுமே இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த பின்னடைவுகளின் காரணமாக பாகிஸ்தான் அணியின் மீது பரவலான விமர்சனங்கள் ஏற்பட்டுள்ளன. ரசிகர்கள் மத்தியிலும் அதிருப்தி நிலை ஏற்பட்டது. எனவே, மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் யூனிஸ்கான் பாகிஸ்தான் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பதவி நீக்கப்பட்ட சொயிப் மலிக் ஒன்றரை வருடகாலமாக அணியின் தலைவர் பதவியை வகித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்படி டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணி என இரண்டிற்கும் யூனுஸ்கானே தலைவராக இருப்பார். இதேவேளை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முகாமையாளர் பதவியிலிருந்து ஜாவிட் மியன்டாட் பதவி விலகியுள்ளார்.

விளையாட்டுத்துறை அதிகாரிகளுடன் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாகவே அவர் பதவி விலகியுள்ளதாக கருதப்படுகின்றது. மேலும், பாகிஸ்தான் அணியின் தலைவர் பதவியிலிருந்து சொயெப்மலிக் நீக்கப்பட்டமைக்கும் மியன்டாட் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

# சிறந்த வீரர் மைக்கல் ஃபெல்ப்ஸ்



2008 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராக அமெரிக்காவின் மைக்கல் ஃபெல்ப்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஒலிம்பிக் குழுவே இந்தத் தெரிவை மேற்கொண்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின்போது அதிக பதக்கங்கள் பெற்றதனை கருத்தில் கொண்டே ஃபெல்ப்ஸ் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம்




**இந்துநதி நாகரிகம் (Indus valley civilization) ஆனது எகிப்து, மொசப்பத்தேமியா, சீனா போன்ற இடங்களில் தோற்றம் பெற்ற நாகரிகங்களைப் போன்ற மிகப் பழைமையான ஒரு நாகரிகமாகும் .இன்றைய பாகிஸ்தானிலுள்ள இந்து நதியை (சிந்து நதி) அண்டிய பகுதியில் தோன்றிய இந்த நாகரிகம், கி.மு 3000இற்கும் கி.மு 2500 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உச்ச நிலையினை அடைந்திருந்தது. மொகஞ்சதாரோ, ஹரப்பா கலாசாரத்துடன் இணைந்ததாக இது காணப்பட்டது.**

## வளர்ச்சி

இந்துவெளிப் பகுதியில் கி.மு 6000 ஆண்டளவிலேயே மக்கள் குடியேற்றங்களும் சிறிய நகரங்களும் இருந்ததாகக் கூறப்படுகின்றது.


சுதந்திரமான நிர்வாகம் மற்றும் தன்நிறைவுப் பொருளாதாரம் ஆகியவற்றைகொண்ட நகர அரசுகளாகவே இவை இருந்ததாக சான்றுகள் தெரிவிக்கின்றன. அக்காலத்தில் வேறெந்த நாகரிகத்திலும் இல்லாத அளவில் சுமார் 13 லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசத்தில் இந்து நாகரிகம் பரவிக் கிடந்தது. இங்கே 200 இற்கும் மேற்பட்ட ஊர்களும் 6 மிகப் பெரிய நகரங்களும் இருந்தன. இந்துநதி நாகரிகத்தில் காணப்பட்ட நகர அமைப்பு, சுகாதாரக் கட்டமைப்பு, நகரத்திட்டமிடல் என்பன அக்கால மக்களின் முன்னேற்றத்தை வெளிப்படுத்துகின்றன.



இந்து நாகரிகம் நிலவிய பகுதிகள்



அத்துடன், இந்த நாகரிகம் மிக முன்னேறியதாக விளங்கியது என்பதனை அங்கிருந்து கிடைக்கப் பெற்ற கலைப்படைப்புகளின் ஊடாகத் தெரியவருகின்றது. ஆயிரக்கணக்கான ஆண்-பெண் மானுடப் படைப்புகள் அங்கிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. தவிர, விலங்குகளின் உருவங்கள், மட்பாண்டங்கள், விளையாட்டு உபகரணங்கள், குறியீட்டு வடிவங்கள் என்பன அங்கிருந்து கிடைக்கப் பெற்றுள்ள இதர கலைப்படைப்புகளாகும். இவை இந்துநதிக்கரை நாகரிகத்தின் பல குணவியல்புகளை பிரதிபலிக்கின்றன. வணக்கத்திற்குரிய உருவங்கள், கன்னிகைகளின் உருவங்கள், ஆண்களின் உருவங்கள், ஜகத் மாதாவின் உருவம் என்பன இவற்றில் சிறப்புவாய்ந்தவை. காளைகள், யானைகள், காண்டா மிருகங்கள் ஆகிய படைப்புகள் உன்னதமானவையாகக் கருதப்படுகின்றன.



எழுத்து வடிவங்கள் எனக் கருதப்படும் குறியீடுகள்





## மக்கள்


இங்கு வாழ்ந்த மக்கள் எந்த இனத்தை சேர்ந்தவர்கள் என்பது பற்றி உறுதியாக அறிந்து கொள்வதற்கான சான்றுகள் இன்னும் கிடைக்கவில்லை. இந்துநதி நாகரிகத்துக்கு உரியவர்கள் திராவிட இனத்தவர்களே என ஒரு சாராரும் ஆரியர்கள் என இன்னொரு சாராரும் கூறுகின்றனர்.

## திராவிடர்

திராவிட இனத்தின் தோற்றம் பற்றி உறுதியான தரவுகள் இல்லை. திராவிடரும் வெளியிலிருந்தே இந்தியாவுக்குள் வந்தனர் என்பது வெளிநாட்டு ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்து. இவர்களுள் சிலர் 'திராவிடர்' மத்திய தரைக்கடல் பகுதிகளிலிருந்தே இந்தியாவுக்குள் வந்ததாகக் கூறுகின்றனர். வேறு சில ஆய்வாளர்கள், தென்னிந்தியா அல்லது அதற்குத் தெற்கே இருந்த கடல் கோளினால் அழிந்துபோன ஒரு நிலப்பகுதியே திராவிடர்களின் தாயகம் என்கின்றனர். இந்தியாவுக்குத் தெற்கே, பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்து அழிந்து போனதாகக் கருதப்படுகின்ற 'லெமூரியா' எனக் குறிப்பிடப்படும் ஒரு நிலப்பகுதியையும் தமிழ் இலக்கியங்கள் சிலவற்றில் பேசப்படும் 'குமரிக்கண்டம்' எனும் பகுதியையும் ஒன்றாக்கி, அப்பகுதியே திராவிடர்கள் தோன்றிய இடம் எனவும் குறிப்பிடுகின்றனர்.

## ஆரியர்

ஆரியர் எனும் சொல்லானது குறித்ததொரு மக்கள் கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாகக் காணப்படுகின்றது. 'ஆரியர்' என்ற சொல் சமஸ்கிருத மற்றும் ஈரானிய மொழிகளின் அடிப்படையில் அமைந்த 'ஆர்ய' எனும் அடிச் சொல்லில் இருந்து மருவி வந்ததாகக் கருதப்படுகிறது. ஆர்ய என்ற சொல் 'அய்ரிய' என்ற ஈரானிய மொழிச் சொல்லுடன் தொடர்புடைய சொல்லாகும். இது சான்றோரையும் சான்றாண்மை என்ற பண்பையும் குறிக்கும் சொல்லாக 'இருக்கு' வேதத்தில் காணப்படுகின்றது.



இந்து நாகரிக மக்கள் பாவித்த ஆபரணங்கள்

## ஆரியர் வருகை


எவ்வாறாயினும், 'ஸ்டெப்ஸ்' புல்வெளிகளில் இருந்து 'கவ்பர்' கணவாயின் ஊடாக ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்ததாக வரலாற்றாசிரியர்கள் பலர் கருதுகின்றனர். அவர்கள் கி.மு 7ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவுக்கும் கி.மு 6-5 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் தென் பகுதிக்கும் இலங்கைக்கும் வந்ததாகக் கூறப்படுகின்றது.வட இந்தியாவில் ஆரியக் குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டு, சிறிய அரசுகள் பல கட்டியெழுப்பப்பட்டதாக 'தம்பதிவ' வரலாற்று நூல்களில் தெளிவாகக் கூறப்படுகின்றது.



இங்கு பேசப்பட்ட மொழியின் எழுத்து வடிவங்கள் எனக் கருதப்படும் குறியீட்டு வடிவங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. இதனை ஆராய்ந்த ஆய்வாளர்கள் சிலர் இவை எழுத்துக்கள் அல்ல வெறும் குறியீட்டு அடையாளங்களே என தெரிவித்துள்ளனர். இன்று இந்து நதியைச் சுற்றியுள்ள பகுதிகள் முழுவதிலும் பெரும்பான்மையாகப் பேசப்படுவது இந்து-ஐரோப்பிய மொழிகளாகும். எனினும் இம்மொழிகளைப் பேசுவோர் இந்துநதி நாகரிகம் வீழ்ச்சியடைந்த காலப் பகுதியில் இந்தியாவுக்குள் வந்ததாகக் கருதப்படுவதால், இது இந்து-ஐரோப்பிய இனத்தைச் சாராத மொழியென பெரும்பாலான ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

## இந்துநதி நாகரிகத்தின் வீழ்ச்சி

இந்துநதி பண்பாட்டின் வீழ்ச்சிக்குக் காலநிலை மாற்றம் தொடர்பான இயற்கைக் காரணங்கள் ஏதுவாக இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. இந்துநதியின் காலநிலை கி.மு 1800 இல் இருந்து குறிப்பிடத்தக்க அளவு



குளிரானதாகவும் வறண்டதாகவும் மாறியது. அத்துடன் காக்கர் ஹக்ரா (Ghaggar Hakra River) ஆற்றின் குறிப்பிடத்தக்க கிளைகள் இல்லாமல் போனதும் முக்கிய காரணமாகக் கருதப்பட்டது. இவையே இந்து நாகரிகத்தின் வீழ்ச்சியாகக் கருதப்பட்ட போதும் பலர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 191 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-202) |
|---|---|---|---|---|
| என்.சல்மா, தரம் - 3B, அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர். | அ.பிரவீணன், தரம் - 2, குளக்கோட்டன் த.வித்., திருகோணமலை. | ச.நஸீமா, தரம் - 11, விபுலானந்தா கல்., திருகோணமலை. | பி.லேகாடில்ஹானி, தரம் - 9C, சித்திவிநாயகர் இ.கல்., மன்னார். | எம்.எஸ்.கிஷாந்த், தரம் - 11B, ரணபிம றோயல் கல்., பேராதனை. |




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.02.11 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 194**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## ரோமன் இலக்கத்தில் எழுதுக 4

அ) 346 - ............................
ஆ) 1252 - ............................
இ) 87 - ............................
ஈ) 769 - ............................
உ) 935 - ............................
ஊ) 2745 - ............................
எ) 818 - ............................
ஏ) 45 - ............................

## சரியான உருவை அமைக்க 2



## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## (A) இணைக்க

| கண்டுபிடிப்பு | கண்டுபிடிப்பாளர் |
|---|---|
| 1. சைக்கிள் | 1. வோல்டா |
| 2. மின்கலம் | 2. மொன்ட் கொல்ஃபர் |
| 3. ஒக்சிஜன் | 3. ஜே.ப்ரீஸ்ட்லி |
| 4. தையல் இயந்திரம் | 4. மெக்மில்லன் |
| 5. பலூன் | 5. திமோன்னியர் |

## (B) பொருத்தமான சொல்லில் கோடிடுக 3

1. அடுக்களை - வீடு, அடுப்பு, சமையலறை.
2. ஊதியம் - வேலை, சம்பளம், பணியாளர்.
3. வல்லமை - திறமை, வள்ளல்,அகங்காரம்.
4. விண்மீன் - சுறா, தாரகை, ஆகாயம்.
5. சமர் - யுத்தம், போட்டி, வாள்.

## அறிவுக்கு விருந்து 191 விடைகள்

**போட்டி - 03**

(A) எண் - 9
9+9=18
18 ஐத் திருப்பிப் போட்டால் 81
18/9=9


**(B) ஜோடி எண்கள் முறையே;**

(அ) 345, 473, 279
(ஆ) 18, 6, 17, 31
(இ) 7, 4, 26, 70
(ஈ) XXXIX, VIII, LIV, XC
(உ) XL, CL, CMXL, LXXXVII

**போட்டி - 04**


| (A) | (B) |
|---|---|
| 1. மரவேர் | 1. கடல்+ஓரம் |
| 2. சொற்புணர்ச்சி | 2. பூ+கோதை |
| 3. மாடிவீடு | 3. மணி+ஓசை |
| 4. பசுந்தளிர் | 4. நீரை+குடி |

## ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுக 1





## குறுக்கெழுத்துப் போட்டி இல.205 5




**மேலிருந்து கீழ்**

01. காஸா எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்தும் நாடு.
02. கால்நடைக் கூட்டத்தைக் குறிக்கும் பொதுச்சொல்.
03. நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி.
04. தேர்தலில் போட்டியிடுபவர்.
07. மலை-ஒத்தகருத்துச் சொல்.

**இடமிருந்து வலம்**

01. தொண்டையில் வைரஸ் தொற்றினால் ஏற்படக்கூடிய நோயொன்று.
04. உளவு-ஒத்தகருத்துச் சொல்.
05. வேலைப்பாடுகள் கொண்ட பின்னல் துணி.
06. தொடர்பாடல் சேவைகளில் ஒன்று.
07. குயில் கூவும் என்பது போல .......... பேசும்.
08. நீர்நிலை வடிவங்களில் ஒன்று.
09. குளிரில் இருந்து உடலைப் பாதுகாக்கப் பயன்படும் துணியைக் குறிப்பது.

### குறுக்கெழுத்துப்போட்டி 202 விடைகள்

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 01. மூலதனம் | 07. கல்யாணி |
| 02. கையாடல் | 08. பாசி |
| 03. போர் | 09. ஆணி |
| 05. வனை | |

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 01. மூலிகை | 08. பால் |
| 03. போதை | 09. ஆசியா |
| 04. யாவர் | 10. தரணி |
| 06. தண்டனை | |

குறுக்கெழுத்துப் போட்டி -205
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

எஃப்.நம்ரா, தரம் - 10, ஸாஹிரா மு.வித்., எல்லலமுல்ல.

க.கஸ்தூரி, தரம் - 8, ஸ்ரீ சண்முகா இ.ம.கல்., திருகோணமலை.

செய்யத் அர்ஷத், தரம் - 9, டி.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒல்லாந்தரின் கீழைத்தேய வருகை

அந்தக் கப்பல் 'சுண்டா ஜலசந்தி'யை கடந்து சென்றது. மேற்கு ஜாவாவில் 'பெண்டம்' எனும் இடத்தை நெருங்கியது. அங்கு அவர்கள் நிலைகொண்டனர்.

வருடமொன்று கழிந்தது. இக்குழுவினர் மீண்டும் ஒல்லாந்திற்கு சென்றனர். இருநூறு பேரைக் கொண்ட அவர்களின் குழுவில் நூற்றிப்பதினோரு பேரையும் நான்கு கப்பல்களையும் அந்தவேளையில் இழந்திருந்தனர். அப்பயணத்தின்போது தேடிய வருமானத்தையும், போக்குவரத்துச் செலவையும் நிரப்புவதற்கு குறிப்பிட்ட காலம் சென்றது. எனினும், அறிந்து கொண்டதும் பெற்ற அனுபவமும் கொஞ்ச நஞ்சமல்ல. அதன்பின் பதின்மூன்று முறை ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்து சென்றனர்.

அப்பயணங்களில் இலாபம் கிடைத்தாலும் அதிகமான பயணங்களில் பாதிப்பே ஏற்பட்டது. அத்தோடு, போர்த்துக்கேயரின் ஏகபோக வர்த்தகத்தை உடைக்க அவர்களால் முடியவில்லை. அந்தளவிற்கு போர்த்துக்கேயர் கிழக்குலகில் பலம் வாய்ந்த சக்தியாகத் திகழ்ந்தனர். வெற்றிகரமான வர்த்தகத்தில் ஒல்லாந்தர் ஈடுபடுவதாயின் அவர்கள் போர்த்துக்கேயருடன் போராட வேண்டியிருந்தது. அதற்காக சக்தி வாய்ந்த கடற்படை அவசியமாகியது. அதேபோல் யுத்த முகாம்களிலும் காவல் நிலையங்களிலும் மேலதிக படையினர் அவசியமாக இருந்தது. மேற்குறித்த காரணங்களை ஆராய்ந்த 'வேண் ஒல்டன் பார்ணவெல்ட்' அது குறித்து மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொகனஸஸின் எச்சம்



கொகனஸஸின் எச்சப் பகுதிகள்

# மீன்கள் தரையில் வாழ்ந்துள்ளனவா?

**400 மில்லியன் வருட பழைமைமிகு எச்சம் கண்டுபிடிப்பு!**

இற்றைக்கு 400 மில்லியன் வருடங்கள் பழைமை வாய்ந்த மீனொன்றின் தலைப் பகுதி எச்சங்களை அவுஸ்திரேலியாவின் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளதை அடுத்து, அது தொடர்பான மேலதிக ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சங்களைக் கண்டுபிடித்த இடத்தை ஒத்து அதற்கு 'கொகனஸஸ்' என்று பெயரிட்டுள்ளனர். இந்த ஆராய்ச்சிக்குழுவின் தலைவரான கலாநிதி ஜோன் லோன்க் தெரிவித்துள்ள கருத்தின்படி, உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி விடயத்தில் இந்த எச்சங்களின் மூலம் பல்வேறு விபரங்களை அறியும் வாய்ப்புக் கிட்டியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். உயிரின பரிணாம வளர்ச்சி தொடர்பாக புதிய சிந்தனைகளை இதன் மூலம் வகுத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியொன்றிலிருந்தே இந்த எச்சம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த 'கொகனஸஸ்' எச்சத்தின் தலைப்பகுதியில் காணப்படுகின்ற மூக்குத்துவாரமானது பெரிய துளைகளாகக் காணப்படுகின்றது. எனினும், சாதாரண மீன்களின் மூக்குத் துவாரத்தின் அளவைவிட இது மிகவும் பெரிதாகக் காணப்படுகின்றதாம்; மேலும், எச்சத்திற்குரிய மீனானது எலும்பு மூட்டுக்களைக் கொண்டிருப்பதுடன், நான்கு கால்களைக் கொண்ட உயிரினத்தின் அமைப்பு முறையினைக் கொண்டிருப்பதால் இது வித்தியாசமான கோணத்தில் நோக்கப்படுகின்றது. இதன் முழு உருவத்தை அறியும் நோக்கத்தில் ஓவியத் திறன் மிக்கவர்களின் உதவியும் கோரப்பட்டு அவர்களின் சிருஷ்டிப்புக்கு அமையவும் இந்த உயிரினத்தின் முழு உருவத்தை வரைந்து இனங்காண்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த எச்சங்களைக் கொண்டு இந்த உயிரினத்தின் உருவ அமைப்பைப் பற்றி படிப்படியாக ஆராய்வதன் மூலம் அதன் பரிணாம வளர்ச்சி பற்றி அறியக் கூடியதாக இருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.



ஓவியர் ஒருவரின் கற்பனையில் கொகனஸஸின் உருவம்

இந்த மீன் இனத்தின் எச்சங்களைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் எதனைக் கருத முற்படுகின்றனரென்றால், இவை நீரில் மட்டுமன்றி நிலத்திலும் கூட வாழ்க்கையை நடத்திய ஓர் உயிரினமாக இருந்திருக்கலாம் என்றும், அதுமட்டுமன்றி தற்போதைய மீன் இனத்தை விட மாறுபட்ட வடிவமைப்பில் இவை இருந்திருக்கலாம் என்றும் கருதுகின்றனர். உயிரின பரிணாம வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தைச் சேர்ந்த வித்தியாசமான உயிரினமாக இது இருக்கக்கூடிய சூழ்நிலையில், இதனையொட்டிய பல்வேறுபட்ட உண்மைகளை அறியக்கூடியதாக இருக்கும் என்றும் கருதப்படுகின்றது.

எனினும், இவை சாதாரண மீன் இனமாக அல்லாமல் பரிணாம வளர்ச்சிக்கட்டத்தைச் சேர்ந்த ஓர் உயிரினமாக இருக்கலாம் என்ற தீர்மானத்திற்கு வரக்கூடியதாக இருக்குமா? என்ற திசையிலேயே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 04, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org